தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 58 மலர் : 1

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

வெளியீடு

கரந்தைத் தமிழ்ச் சங்க

THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THANJAVUR.

திருவள்ளுவர் யாண்டு: 2015—இரத்தாட்சி
(1984 ஏப்ரல் - மே) சித்திரை

MALLIKA ARTS

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

1-60

தமிழ்ப் பொழில்

துணர் : 58 | உள்ளுறை | மலர் : 1

1. நூற்றாண்டு விழா நிகழ்ச்சி 2
தமிழவேள் த வே. உமாமகேசுவரனார்
நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்
தொகுப்பு : தமிழ்ப்பித்தன்

2. கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர்
வரவேற்புரை 11

3. வரவேற்புரை — கவியரங்கம் 14
ச. பாலசுந்தரம்

4. விநாயகப் பெருமான் 17
(ஓர் ஆய்வுக் கட்டுரை)
வித்வான் பெ. கு. வரதராசன், எம். ஏ., பி. டி.

5. சோழபுரத்துக் கோயில்கள் 29
டாக்டர் இரா. கலைக்கோவன்

6. தமிழர் பண்பாட்டில் தூவுதல் 37
இராஜ் பவுன்துரை, தமிழ்ப் பல்கலைக் கழகம்

7. கண்ணன் பாட்டு — கண்ணன்
என் காதலி 46
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 58	திருவள்ளுவர் யாண்டு — 2015 இரத்தாட்சி — சித்திரை ஏப்பிரல் — மே 1984	மலர் 1

புத்தாண்டே வருக!

பார்வளஞ் சிறக்க, வஞ்சம் பகைபிணி வறுமைநீங்க
ஊர்நலங்கொழிக்க, மாந்தர் ஒழுக்கம்நன் நெறியே ஓங்கக்
கார்பெயல்கவினக்கல்வி கலையொடு பொலியத், தெய்வச்
சீர்தர வருரத்தாட்சி செல்வியே வருக வாழ்க!

தமிழ்ப்பெழில் தழைக்கவும் செழிக்கவும்
பல்லாற்றுனும் நல்லனபுரியும் அன்பர்கட்கும்
நண்பர்கட்கும் எமது புத்தாண்டு வாழ்த்து.

தமிழவேள்

த. வே. உமாமகேசுவரனார்

நாவலர் பண்டித

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

நூற்றாண்டு விழா நிகழ்ச்சி

தமிழவேள் உமாமகேசுவரப் பெருந்தகையார், நாவலர் ந.மு. வேங்கடசாமிப் பெருந்தகையார் இருவரின் நூற்றாண்டுவிழா ஏப்ரல் திங்கள் 21, 22 ஆகிய தேதிகளில் தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறையும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து இந்த விழாவைக்கொண்டாடின.

21-ஆந் தேதி மாலை திருவையாறு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா துவக்கம் ஆகியது. முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

கரந்தைத்தமிழ் தமிழ்ச்சங்கத்தலைவர் திரு ச. இராமநாதன் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

" தமிழ்த்தொண்டு செய்பவர் எவராக இருந்தாலும் அவரைக் கடவுள் என வழிபடுவது எங்கள் தமிழ்ச்சங்கங்கத்தின் குறிக்கோள் ஆகும்." தமிழவேள் நூற்றாண்டு நிலைவுக்கட்டிடத்தை முத் தமிழ்க்காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் திறந்துவைத்தார். சட்டமேலவைத் துணைத்தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் விழாவைத் தொடக்கி வைத்தார்.

அவர் தெரிவித்தார்.

" தமிழை வளர்ப்பதற்காகச் சங்கத்தை ஏற்படுத்தினார் தமிழ வேள் உமாமகேசுவரானார். பின்னர் தமிழ்க்கல்லூரி தொடங் கினார். அக்கல்லூரி தமிழ்ப்பல்கலைக்கழகமாக ஆகவேண்டும் என முதன் முதலில் சொல்லிய பெருந்தகை தமிழவேள் அவர்கள்தான். அவரது ஆசை, மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிசெய்யும் இந்தக் காலத்தில்தான் நிறைவேறியுள்ளது.

"நாட்டார் வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சி இல்லை, சொந்த வீடுகூட அவருக்குக்கிடையாது. ஆனால் இன்று தமிழ்

ஆசிரியர்கள், தலைமை ஆசிரியராகலாம் எனச் சட்டம் போடப் பட்டுள்ளது. நலிவுற்ற தமிழாசிரியர்களுக்கு ஓய்வூதியமும் வழங் கப்பட்டு வருகிறது".

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது :

''சான்றோர்கள் பாராட்டப்படுகின்றனர். அதற்குக் காரணம் என்ன? பி. ஏ., எம். ஏ. பட்டமா ? தமிழ்த் தொண்டா? பதவியில் இருப்பதனாலா? பொதுமக்களுக்குப் பணி செய்வதாலா? ஒரு மனிதன் படிப்பாலோ பட்டத்தாலோ, பதவியாலோ எழுத்தாற்ற லாலோ பேச்சாற்றலாலோ, செல்வத்தாலோ, தொண்டினாலோ மேன்மையடைந்துவிடமுடியாது. மேன்மையை அடைய ஒரே ஒரு வழி, ஒழுக்கமாக வாழ்வதுதான்! ஒப்பற்ற ஒழுக்கத்தைக் கடைப் பிடித்து மேன்மையடைந்தனர் தமிழவேள் அவர்களும், நாட்டார் அவர்களும்.''

தமிழவேள் அவர்களின் சிறப்பு மலர்ஒன்றினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண் இயக்குனர் திரு டி. கே. சீனிவாசன் அவர்கள் வெளியிட, முதற்படியைப் பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணனார் பெற்றுக்கொண்டார்.

திரு டி.கே. சீனிவாசன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் நாட்டுத் தலைவர்களின் பிறந்தநாளை அரசு கொண்டாடும் வழக்கம் உரு வாகியிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒரு தடாகம், அதனை நிறுவியவர் உமாமகேசுவரனார். அந்தத் தடாகத்தில் மலர்ந்த தாமரை வேங்கடசாமி நாட்டார். உமாமகேசுவரனார் ஒரு வீணையைச் செய்தார். அதனை மீட்டும் விரல் எது என ஆராய்ந்து பார்த்தார். அது வேங்கடசாமி நாட்டாரின் விரல் என்பதைக் கண்டார்.

''நாட்டார் அவர்களிடம் பாரதியார் சிலப்பதிகாரம் குறித்துத் தமது சந்தேகத்தைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டார் என அறிகிறோம். பாரதி 'கல்வி சிறந்த தமிழ்நாடு உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று சொன்னான். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாடினான். இந்த இரண்டு இலக்கிய வாணர்களின் பெயர்களைக் குறிப்பிட்ட அவன் அடுத்து 'நெஞ்சைஅள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்று சொன்னான். நாட்டார் விளக்கம்

கேட்டு சிலப்பதிகாரத்தின் சிறப்பை பாரதி நன்கு அறிந்து கொண்டான். அதன் தாக்கமே அந்நூலுக்கு அவன் கூறிய புகழ் மாலை''.

கரந்தைத்தமிழ்ச்சங்க வெளியீடான கட்டுரைப்பூங்கா, என்னும் மலர் ஒன்றைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் சிலம்பொலி சு. செல்லப்பன் வெளியிட்டு உறையாற்றினார். அவர் தமது உறையில் தெரிவித்தார்.

''நூலை வாங்குவது மட்டும் போதாது. அவசியம் படிக்க வேண்டும். எதைப்படிக்கவேண்டும். எப்படிப் படிக்கவேண்டும் என் பதைத் தெரிவிக்க, பாவேந்தர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். நூலைப்படி எனத்தொடங்கும் அந்தக் கவிதையில் படி என்னும் சொல் 32 இடங்களில் வருகிறது."

முதற் படியைப் பெற்றுக்கொண்ட பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் திரு.மு.சு. கோவிந்தசாமி தமது உரையில் குறிப்பிட்டார்.

''தமிழ்த்தொண்டு செய்தோன் சாவதில்லை என்று பாவேந்தர் கூறியதற்கிணங்க நாட்டுக்காக வாழ்ந்த நமதுதமிழவேள் அவர்கள் சாகவில்லை; தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் கொலுவிருக்கின்றார்''

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துடன் பல வகையிலும் தொடர்பு கொண்ட ஏழு பெருமக்கள் பாராட்டப் பெற்றனர். தலைவர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பாராட்டுப்பத்திரங்களை வழங்கினார்.

திரு அ.கு. வேலன் சங்கப்புரவலர் என்னும் பட்டமும், திரு வெள்ளைவாரணனார் 'செந்தமிழ்ச்சான்றோர்' என்னும் பட்டமும் பாவலரேறு ச. பாலசுந்தரம், 'தொல்காப்பியப்பேரறிஞர்' என்னும் பட்டமும், திரு இரா. கோவிந்தராசர், உமாமகேசுவரனாரின் திரு மகனார் உ. சிங்காரவேலு ஆகியோர்' 'செந்தமிழ்த்தொண்டர் என்னும்பட்டமும் உமாமகேசுவரனார் வரலாற்றை எழுதிய டாக்டர் சாம்பசிவம், கரந்தைத்தமிழ்ச்சங்கம் என்னும் நூலை எழுதிய பேராசிரியர் சின்னத்தம்பிஆகியோர் 'செந்தமிழ்ச்செல்வர்' என்னும் பட்டமும் பெற்றனர்:

சங்கக் கணக்கர் திரு ஆறுமுகம் பிள்ளை, உடற்பயிற்சி ஆசிரியர் திரு. செல்வராஜ் ஆகியோருக்கு ஒரு சவரன் எடையுள்ள கணையாழிகள் வழங்கப்பட்டன. மற்றும் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த தொடக்கப்பள்ளி – மேனிலைப்பள்ளி – தமிழ்க்கல்லூரி ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்ஆசிரியரல்லாத பணியினர் அனைவருக்கும் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பாராட்டுப் பெற்றோர் சார்பில் அ. கு. வேலன் வெள்ளை வாரணனார் நன்றி கூறினர்.

வழக்குரைஞர் திரு சி. சந்திரமோகன் நன்றி நவின்றார். அதன் பின்னர், கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்திய 'தமிழவேள் - ந மு. வே' வரலாறு என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

2ஆம் நாள் நிகழ்ச்சி காலை 10. 30 மணி அளவில் தொடங்கியது. தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் திரு பன்னீர் செல்வம் வரவேற்க, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. அய் சுப்பிரமணியம் கருத்தரங்கிற்குத் தலைமையேற்றார்.

தலைவர் தமது உரையில் தெரிவித்தார் :

"தமிழவேள் நீதிக்கட்சி உறுப்பினர் ; வழக்குரைஞர். அது மட்டுமல்ல, அவர் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து இறுதி வரை உழைத்து வாழ்க்கையை அதற்காகவே அர்பணித்துக் கெ ண்டவர் திராவிட வங்கி என்ற ஓர் அமைப்பையும் அவர் தோற்றுவித்திருக்கிறார்".

தமிழவேள் அவர்களின் பொதுப்பணி குறித்துப்பேசிய டாக்டர் அ. ம. பரிமணம் குறிப்பிட்டார்:

"தொண்டு செய்து தொண்டு செய்து உயர்ந்து, பின், வானத்து நிலவாகத் திகழ்ந்தார் தமிழவேள். அவரை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நிலாவாக ஆக்கிக்கொள்ள வேண்டும்

அவரது தொண்டு எல்லாமே பொதுத் தொண்டுதான். அது தனி ஒருவருக்காக எழுந்தது அல்ல. கல்விக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தார். கூட்டுறவுப் பதிப்பகம் ஒன்றினையும் அவர் தொடங்கினார்" அடுத்து நாவலர், 'நாவலர் ந மு. வே. அவர்களின் தமிழ்ப்பணி' குறித்து உரையாற்றிய டாக்டர் சு. சிவகாம சுந்தரி தெரிவித்தார் ;

"ந. மு. வே. அவர்கள் நூலாசிரியர், கட்டுரை ஆசிரியர், பதிப்பாசிரியர், பெரிய பேச்சாளர் என்பதை விட, இன்று நமக்கு என்ன வேண்டும் என்பதை அன்றே தொட்டுக்காட்டிச் சென்றிருக்கிறார். படிப்பு முக்கியம் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். எப்படிக் கற்க வேண்டும் என்பதில் அவர் மாறுபடுகிறார். ஆழமாக-அகலமாகக் கற்கவேண்டும் என்றெல்லாம் சொல்லாமல், தாய்மொழி மூலமாகப் படிக்க வேண்டும் என்கிறார்."

"தமிழவேள் அவர்களின் தமிழ்த்தொண்டு' என்ற தலைப்பில் உரையாற்றிய தமிழ்வளர்ச்சி—பண்பாட்டு துறைச்செயலர் டாக்டர் அவ்வை து. நடராசன் தெரிவித்தார்.

"ஐங்குறுநாறு மருதப்பகுதிக்கு உரை எழுதப்பட்ட காலத்தில் உரை எழுதக்கூடாது என்று ஒருவர் வழக்குத் தொடுத்தார். இதை அறிந்த தமிழவேள் அவர்கள், வழக்கு மன்றத்திற்கு ஒருவிடை எழுதி அனுப்பினார். அதனை வழக்கு மன்றம் ஏற்றுக் கொண்டது. அதன்பிறகு பலர் பழைய இலக்கியங்களுக்கு உரை எழுதமுடிந்தது. தமிழவேள் இயக்கமாகத் திகழ்ந்தார். ந. மு. வே. இலக்கியமாக விளங்கினார். பல்லாவற்றாலும் தமிழை வளர்ப்பதையும் காப்பதையும் பெரும் பணிகளாகக் கொண்டு வாழ்ந்தவர் தமிழவேள்".

அடுத்து, 'தமிழவேள் அவர்களின் பெருவாழ்வு' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் மெ. சுந்தரம் குறிப்பிட்டார்.

"1938 ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய உலகில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு ஆகும். அந்த ஆண்டில் தான் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவானது. உமா மகேசுவரனாருக்குத் தமிழவேள் பட்டம் வழங்கப் பெற்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பெற்றது. உமாமகேசுவரனார் ஸ்ரீ என்பதை நீக்கி 'திரு' என்று குறிப்பிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் திருவாளர் சங்கம் என்று சிலர் கேலி பேசியதும் உண்டு. தமிழவேள் ஊட்டிய தமிழ் உணர்வு ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்க".

அடுத்து 'நாவலர் ந. மு. வே. அவர்களின் பெருவாழ்வு' என்னும் பொருளில் உரையாற்றிய பேராசிரியர் கோதண்டபாணி தெரிவித்தாவது :

"ஒரு பல்கலைக் கழகம் ஆற்றவேண்டிய பணியினைத் தாம் ஒருவராகவே நடத்தி வந்திருக்கிறார். நல்ல பண்புகள் கொண்டு விளங்கினார். 1933—ஆம் ஆண்டே சென்னைப் பல்கலைக் கழகத்தின் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றியிருக்கிறார். நக்கீரர், கபிலர் ஆகியோரின் வரலாற்றை நூலாக எழுதியுள்ளார். சைவமும் தமிழும் வாழத் தமது வாழ்நாளை அர்பணித்துக் கொண்டார்."

அடுத்து, 'நாவலர் ந. மு. வே. அவர்களின் உரைத்திறன்' என்ற பொருளில் உரையாற்றிய பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் தெரிவித்தார்.

நீதி நூல்களுக்கும் திருவிளையாடற்புராணத்துக்கும், சிலப்பதிகாரத்துக்கும், அகநானூற்றுக்கும் மணிமேகலைக்கும் அவர்

உரை எழுதியிருக்கிறார். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கலைகளைக் கற்கவேண்டும் என்று அவர் நினைத்ததன் பயன்தான் இன்று நாம் அனுபவிக்கும் உயர்வு".

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு. த. பெரியாண்டவன் நன்றி நவில – கருத்தரங்க நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 5 மணி அளவில் பாவலரேறு ச. பாலசுந்தரம் வரவேற்புக் கவிதை வாசிக்க, உவமைக் கவிஞர் சுரதா தலைமை ஏற்க, கவி அரங்க நிகழ்ச்சி தொடங்கியது. புலவர் தொல்காப்பியன், புலவர் அரங்க அறமன்னர், புலவர் கங்கை மணிமாறன் ஆகியோர் தமிழவேளின் பெருமை குறித்தும், புலவர் புலமை வேங்கடாசலம், புலவர் வை. கண்ணபுரக் கண்ணன், புலவர் தே. சந்திரன் ஆகியோர் நாவலர் ந. மு. வே. அவர்களின் புகழ்ச்சரிதம் குறித்தும் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர்.

பின்னர், உவமைக் கவிஞர் சுரதா - தமிழவேள் குறித்துச் சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் பல அரிய தகவல்களைத் தெரிவித்தார். அவை வருமாறு:

''1917 ஆம் ஆண்டிலேயே தன் வரலாறு எழுதினார் தமிழவேள் உமாமகேசுவரனார். 'நீராரும் கடலுடுத்த' என்னும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை அக்காலத்திலேயே சிறுநூலாக வெளியிட்டிருக்கிறார். தமிழவேள்- நாட்டார் இருவரின் புகைப்படங்களையும், இந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியில் பயின்றவர்கள் தம்மிடம் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.''

பின்னர் பேசிய, டாக்டர் வே. காத்தையன் குறிப்பிட்டதாவது ''நாட்டார், உழைப்பால் உயர்ந்தவர். அவரது நல்ல தொண்டு நாட்டுக்குப் பயன்பட வழிவகுத்துக் கொடுத்தவர் தமிழவேள். இருவரும் முறையே கபிலரும் பாரியும் போல விளங்கினர். ஔவையாரையும் அஞ்சியையும் போல வாழ்ந்தனர்.''

மாலை 6 மணி அளவில் நிறைவு விழா தொடங்கியது. தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. சு. செல்லப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

'' இந்தத் தஞ்சையின் பெருமைக்குக் காரணம், வானம்பொய்ப்பினும் தான் பொய்யாக் கடற் பரப்பன்ன காவிரிமட்டுமன்று, தமிழவேள் உமாமகேசுவரனார் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய பெருஞ்சான்றோர்கள் தோன்றியதுதான்".

அடுத்துப் பேசிய கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வர் பி. விருத்தாசலம் குறிப்பிட்டார்.

தமிழவேளுக்கும் நாட்டாருக்கும் இயல்பாகவே பல பொருத்தங்கள் அமைந்திருக்கின்றன.

உமாமகேசுவரனார் தமிழவேள் என்றால் நாட்டார் அவர்கள் தமிழவேல்.

உமாமகேசுவரனார் தமிழ்க் காவலர்-நாட்டார் தமிழ் நாவலர்.

உமாமகேசுவரனார் புரவலர்; நாட்டார் புலவர் பெருமான். புலவர் பலருக்கு உறுதுணையாக விளங்கியவர் தமிழவேள்; புலவர் பலரை உருவாக்கியவர் நாட்டார்.

தமிழ்ச்சுவையை நாட்டுக்கு ஊட்டியவர் தமிழவேள். தமிழுக்கே சுவையை ஊட்டியவர் நாவலர்.

நல்ல தமிழ் வளர ஊக்கம் தந்தவர் தமிழவேள்; அதற்கு ஆக்கம் தந்தவர் நாவலர்.

தூய-நல்ல தமிழை தமிழ் நாட்டினர் பயன்படுத்த வேண்டும் என்பதில் இருவரும் முனைப்பாக இருந்தனர். தமிழைச் சிதைக்காமல் பேசிவந்தனர். இருவரும் நாணயமானவர்கள்-தன்னலம் கருதாதவர்கள்-பிறர் நலம் பேணியவர்கள். தூயவாழ்க்கைக்கு இலக்கணமாக விளங்கியவர்கள்.''

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு ஆ. மணி நன்றி நவில, இரண்டுநாள் நடைபெற்ற இரட்டையர்விழா இனிது நிறைவேறியதுடன், தமிழ் இதயங்களை எல்லாம் மகிழ்ச்சி மழையில் நனைத்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு :

— தமிழ்ப்பித்தன்

நன்றி : தமிழரசு

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் வரவேற்புரை

வையம் என்றதொன் மக்கள் உளத்தினைக்
கையினால் உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள், தலை கொண்டு பணிகுவாம்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவராக முப்பது ஆண்டுகள் பொறுப்பேற்றிருந்து தமிழ்த்தொண்டு செய்தவரும், தமிழ்த்தாய் தவமிருந்து பெற்ற நன்மக்களுள் தலைமகனாக விளங்கியவருமான செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த. வே. உமா மகேசுவரனார். கபிலர், நக்கீரர், முதலிய சங்ககாலப் புலவர்களைப் போலவும், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களைப் போலவும் விளங்யகி தமிழ்ப்பேறறிஞர் நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய இருபெரும் தமிழ்ச் சான்றோர்களின் நூற்றாண்டு விழாக்களையும், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையும் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் இந்த இனிய வேளையில் விழாவிற்கு வருகை தந்திருக்கிற தமிழ்ச் சான்றோர்களாகிய உங்கள் அனைவரையும் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் என்ற முறையில் வரவேற்கின்ற பெரும் பேறு பெற்றமை குறித்து மிகவும் மகிழ்கிறேன். தமிழ்ப்பேரன்பர்களாகிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் அனைவரையும் சங்கத்தார் சார்பில் வருக வருக என்று அகமும் முகமும் மலர வரவேற்கின்றேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தொண்டு, தமிழ், முன்னேற்றம் என்னும் குறிக்கோள்களைக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழர் நல்வாழ்விற்காகவும் இடையறாது பாடுபட்டுவரும் ஓர் உயர்ந்த தமிழ்ச்சங்கமாகும். அங்கமெல்லாம் குறைந்து அழுகிய தொழுநோயாளியாக இருப்பினும் அவர் தமிழுக்கு தொண்டு செய்பவராக இருப்பின் அவரைத் தெய்வமாகத் தொழுது வணங்குவது எங்களுடைய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தரின் இயல்பாகும். இத்தகைய இயல்புடைய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்க்குத் தலைவராக இருந்த நம்முடைய தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்களோடும், நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரையா அவர்களோடும், நெருங்கிய தொடர்பு

உடையவரும், அவ்விருவர்பாலும் மிகுந்த மதிப்புடையவரும், அவர்கள் நினைத்ததை நினைத்தபடி செய்து முடித்தவரும் தமிழுக்கு இடுக்கண் நேரும் இடங்களில் எல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்யும் போர்மறவருமாகிய மதிப்பிற்குரிய முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் இந்நூற்றாண்டு விழாக்களின் முதல் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருப்பது மிகவும் பொருத்தமுடையது ஆகும். விழாத்தலைமை ஏற்றிருக்கும் மூத்த தமிழ்க்காவலராகிய முத்தமிழ்க்காவலர் அவர்களை 'வருக வருக' என அன்புடன் வரவேற்கின்றேன்.

விழாவில் தொடக்கவுரை ஆற்றிச் சிறப்பிக்கவந்துள்ள தமிழகச் சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர் அவர்கள் நம்முடைய தஞ்சை நகரத்தைச் சார்ந்தவர். பழகுதற்கினியவர்: இனிமையாகப் பேசும் இயல்புடையவர். ஆரவாரமில்லாமல் அமைதியான முறையில் ஆக்கப்பணிகள் செய்யும் திறமைசான்றவர்: தமிழாசிரியர்களுக்கு உற்ற நண்பராக இருந்து உதவிகள் பல செய்பவர், தமிழ் உணர்வுடைய நம்முடைய மேலவைத்துணைத்தலைவர் அவர்களையும் அன்புடன் வருக வருக என வரவேற்கின்றேன்.

தமிழவேள் உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாச்சிறப்பு மலரை வெளியிடுவதற்காக வருகை தந்திருக்கின்ற தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவன மேலாண் இயக்குநர் அன்பிற்கும் மதிப்பிற்முரிய தத்துவமேதை டி கே. சீனிவாசன் அவர்கள் திராவிட இயக்கத்தின் முன்னனித்தலைவர்களில் ஒருவராவர். சங்கத்தின்பால் பேரன்பு கொண்டு தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் உமா மகேசுவரர் மேல்நிலைப்பள்ளிக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் ஒன்று கட்டித் தருவதற்கு உறுதி அளித்திருக்கின்ற தத்துவமேதை அவர்களை வருக வருக என்று வாயார, மனமார வரவேற்கின்றோம். சிறப்பு மலரின் முதல்படியைப்பெற்றுக்கொண்டு எங்களைப் பெருமைப்படுத்தும் முதுபெருந் தமிழ்ப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் ஐயா அவர்களை அன்புடன் வருக வருக என வரவேற்கின்றேன்.

தமிழவேள் நூற்றாண்டு விழா நினைவாக வெளியிடப்பெறும் ஆராய்ச்சிக்கட்டுரைத் தொகுதியாகிய 'கட்டுரைப் பூங்கா'வினை வெளியிடுபவர் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திருமிகு சிலம்பொலி சு செல்லப்பனார் அவர்கள் தமிழவேள் உமா மகேசுவரனார். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரையா ஆகிய இருபெருந் தமிழ்ச்சான்றோர் விழாக்களும் அரசு விழாக்களாக நடைபெற அடிப்படைக்காரணமாக இருப்பவர். நம் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களே ஆவர். புலத்துறை முற்றிய

சான்றோராகவும், நாடறிந்த நல்ல தமிழ்ச்சொற்பொழிவாள ராகவும் விளங்கிவரும் நம் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களை யும் அன்புடன் வருக வருக என வரவேற்கிறேன்.

கட்டுரைப் பூங்காவின் முதல்படியைப் பெறுபவர் நம் அன்பிற் கும் மதிப்பிற்கும் உரிய பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் திருமிகு. பேராசிரியர் மு. சு. கோவிந்தசாமி அவர்கள் ஆவர். கடுமையாக வீசும் புயற்காற்றுக்கிடையே அமைதியாக மரக்கலத்தைச் செலுத் திச் செல்லும் மாலுமி போன்று, மாணவர் கொந்தளிப்பும், ஆசிரியர் போராட்டமும் நிறைந்த தமிழ் நாட்டுக் கல்வி உலகத்தில் தம்முடைய கல்லூரியை அமைதியாக நடத்திச் செல்லும் ஆற்றல் சான்றவராகிய கல்லூரி முதல்வர், பேராசிரியர் கோவிந்தசாமி அவர்களையும் அன்புடன் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

விழா நடைபெறுவதற்குப் பெருந்துணை செய்து என்னுடன் தோளோடு தோள் கொடுத்துப் பொதுவாகச் சங்கப்பணிகளையும் சிறப்பாக நூற்றாண்டு விழாப்பணிகளையும் செய்து வரும் கரந்தைத் தமிழ்ச்சங்க நிறைவேற்றுக் கழகத்தாரையும், உறுப்பினர்களையும் அன்புடன் வருக வருக என்று வரவேற்கிறேன்.

சங்கத்திடம் நீங்காத பாசம் கொண்டு உற்றுழி உதவும் உயர்ந்த சான்றோராகிய திருமிகு ஏ. கே. வேலன் அவர்கள், சங்கம் நல்லமுறையில் தமிழ்த்தொண்டு செய்ய அவ்வப்போது ஆலோசனை கூறி உதவும் தமிழ்ப் பேரறிஞராகிய பேராசிரியர் வெள்ளைவாரனர் ஐயா அவர்கள், கரந்தைப் புலவர் கல்லூரியில் முப்பத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவரும், தமிழ்ப்பொழில் இதழுக்கு இப்போது பதிப்பாசிரியராக இருந்து தொண்டு செய்து வருபவருமாகிய பாவலர்ஏறு பாலசுந்தரம் அவர்கள், தமிழவேள் உமாமகேசுவரனார் அருமை மகனார் டாக்டர் உ. சிங்காரவேலு அவர்கள், சங்கம் நிறுவிய துங்கன் போற்றுதலுக்குரிய இராதாகிருட்டினனார் அவர்கள் மகன் திருவாளர் இரா. கோவிந்தராசர் அவர்கள், தமிழ்வேள் பற்றி நூலெழுதியவராகிய பேராசிரியர் டாக்டர் சாம்பசிவம் அவர்கள், கரந்தைத் தமிழ்ச் சங்கம் பற்றி நூலெழுதிய பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் ஆகிய எழுவரும் சங்கத்துக்குச் செய்துள்ள தொண்டுகளைப் பாராட்டி நன்றி செலுத்தும் பொருட்டு இன்று சங்கத்தின் சார்பில் பட்டம் அளித்துப் பாராட்டவுள்ளோம். எங்களுடைய வேண்டுகோளைஏற்று இவண் வருகை தந்திருக்கின்ற தமிழ்ச் சான்றோர் எழுவரையும் அன்புடன் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

வரவேற்புரை - கவியரங்கம்

தமிழ் வாழ்த்து

பல்கதிர் சூழ்ந்தொளிர் பருதியின் நீங்கிச்
செல்முகில் பெய்யக் கல்லழல் மாறி
மல்குநீர் சூழ்ந்த மண்ணகை மீதில்
புல்முளை தோன்றிப் பூத்த அப்பொழுதே
சொல்முளை தோன்றிச் சுவையெலாம் நிறைந்து
வெல்கலை யாவும் விரிந்திடக் கிளைத்த
தொல்பழந் தமிழே ! துணை நலங்கருதி
பல்மொழி உலகிடைப் படைத்தபைந் தமிழே !
நல்லிசை ஏழ் திறம் நல்கிய தாயே ! உன்
வல்லமை அறியார் வாழுமிந் நாட்டில்
செல்வழி அறியாச் சிறியேன் நினது
மெல்லடி போற்றி வணங்குவென் வாழ்க !

(முன் பக்கத் தொடர்ச்சி)

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கணக்குகளைஎல்லாம் முறையாக எழுதி வருபவரும், தென்னங்குடி சுந்தரராச நாட்டார் பெயரில் அமைந்துள்ள திக்கற்ற மாணவர் இல்லத்துக்குக் காப்பாளராக இருந்து தொண்டு செய்து வருபவருமாகிய திருவாளர் த. ம. ஆறுமுகம்பிள்ளை அவர்கள், உமாமகேசுவரா மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் கோ கோ. விளையாட்டில் தமிழ் நாட்டு அளவில் வெற்றிபெறக் காரணமாக இருந்த நம்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் திரு வை. ந செல்வராசு அவர்கள், சங்கக் கல்வி நிலை யங்களில் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் பெருமைக்குரிய ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், இவ் விழாச் சிறக்க அல்லும் பகலும் அயராதுபாடுபட்டுவரும் அனைத்து ஆசிரியர்கள் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் என் னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து அன்புடன் வருக வருக என்று வரவேற்கிறேன்.

நூற்றாண்டு விழா நாயகர்களாகிய இருபெருஞ் சான்றோர்கள் பாலும் அன்புகொண்டு எங்கள் அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்சின்ற தமிழன்பர்களாகிய அவையோர் அனைவர்க்கும் மீண்டும் ஒருமுறை மகிழ்வுடன் வரவேற்பும் வணக்கமும் கூறி அழைக்கின்றேன்.

''வாழ்க தமிழ்''

நூற்றாண்டு விழா நாயகர் வாழ்த்து

மன்னரையும் வேந்தரையும் படைத்து அவர்தம் காவலினால்
பன்னலமும் நல்கியிந்தப் பாராண்ட செந்தமிழ்த்தாய்
என்னவிளையாட்டோ இடையிடையே வீரமில்லாச்
சின்னமனத்தாரினையும் படைத்து நலங்குன்றிடுவாள்
தேய்ந்து வளம் குன்றுங்கால் சிதர்ந்தபுகழ் மீட்பதற்குப்
பாய்ந்து பகைவென்று நலம் பரப்பும் அரிஏறுகளை
ஈந்துவப்பாள் ஈதவளின் வாடிக்கை—என்பதனை
மீந்து நிற்கும் வரலாறு காட்டும் அந்தவழக்கத்தால்
ஆட்சிமொழி வேறாகி அறிவுபெறப் பயில்கின்ற
காட்சிமொழி மாறாகிக் கலை மொழியும் நீறாகி
ஈசனிடத்தாவ தியம்புவமென்றங்குறினும் — ஆங்கும்
பேசுமொழி வேறாகிப் பேரிருள் சூழ்காலத்தே
செந்தமிழிற் பேசுவதே சிறுமையென எண்ணியிங்கு
வந்த அயல் மொழிக்கெல்லாம் வாய்புதைத்துக் கைகட்டிச்
சிந்தை மயக்கத்தால் சாவாமல் செத்துமனம்
அஞ்சித் தமிழகத்தார் அடிமைகளாய்த் திரியுங்கால்
தஞ்சமளித்திந்தத் தமிழர்களைப் பேணுதற்கு
நெஞ்சில் இனஉணர்வும் நேர்நோக்கும் பேரறிவும்
சிறுமை விரவாத சிந்தனையும் தியாகமும் நன்
முறைமை பிறழாத முக்கால நோக்குணர்வும்
சான்ற தமிழ் வீறுமிக்க தனயர் ஒருசிலரை
வென்றி கமழ்பத்தோ டொன்பதாம் நூற்றாண்டில்
தோற்றுவித்தாள்—அனைவருள், ஏற்றமிக இந்நாள் நாம்
போற்றி மிகக்கொண்டாடும் இருவோரும் முன் அணியர்
முச்சங்கம் புரந்தமுடி வேந்தரைஒப் பராரொருவர்
அச்சங்கத் தார்புலவோர் தமை ஒப்பார் மற்றொருவர்
மாறன் ஒருவரெனின் மற்றொருவர் நக்கீரர்
சோழன் ஒருவரெனி துணையவர்தாம் சேக்கிழார்
உற்றொருவர் தமிழ் புரந்தார் மற்றொருவர் தமிழ் வரைந்தார்
புலவர் புரந்தாரொருவர் புலமை புரந்தாரொருவர்
கனிதமிழ்க் காவலரொருவர் நனிதமிழ் நாவலரொருவர்
செந்தமிழ வேளொருவர் பைந்தமிழ நூலொருவர்
பண்டைப் பெருமையைத் தண்டமிழ்நாடு
கொண்டுய உழைத்தமண்டிலச் சுடர் அவர்
இருவரும் தமிழ்த்தாய்க் கொரு பெருந்தொண்டர்
தொண்டர்தம் பெருமைகள் வீண்டிடற் கெளியவோ?
ஒண்டமிழ் மொழிவர லாற்றினுள் சீரிடம்
கொண்டசான் றோரவர் குறிக்கோற் வலம்பெற்று
எண்டிசையும் தமிழ் ஓங்கி இவ்வையகம்
மண்டுறு துயர்டெ. வாழ்த்தொடு வணங்கி
வரவேற்புரையினை வழங்குதுமினிதே

வரவேற்பு

செந்தமிழ்ப் புரவலர் பைந்தமிழ் நாவலர்
அந்தமில் மாண்பினை சிந்தை உவப்புற
அருந்தமிழ்க்கவிதையால் விருந்தெனப்படைக்கப்
போந்துள கவிஞர் வேந்தெனத்திகழும்
உவமை இலாததோர் உவமைக்கவிஞர்
கவிவளத்திற்கொரு காட்டெனத்திகழும்
தேன்மழைக்கவிஞர் திரைபடா நெஞ்சின்
திரைப்படக் கவிஞர் உரையெலாங் கவிதையா
நிரல்படப்பேசும் திறல்மிகு புலவர்
புரையிலாப் பண்பினர், பொன்மனச்செம்மல்
புரட்சித்தலைவர், கற்பனைக்கிவர் எனச்
சுட்டிக்காட்டிடத் துலங்கும் கவிஞர்
சுரதா அவர்களைத் தோழமை சான்ற
அகமகிழன்பொடு வருக வருகென
வரவேற்கின்றேன் — வளர்தமிழ்க்கவிதையுள்
புயலொடு தென்றலை பயில்வுறச் செய்யும்
வியன் தமிழ்க்கவிஞர் வீறுசால் புலவர்
தொல்காப்பியன், தமிழ்ப் பல்காப்பியந் தரும்
கற்பனை நயமெலாம் பொற்புறச் செந்தமிழ்ச்
சொற்களைப் பாவினுள் சுடர்விடச் செய்யும்
அரங்க அறமன்னர்; அருந்தமிழ்க் கடலின்
தரங்கம் எனக்கவின் முழங்கு நடையால்
சங்கக் கவிதரும் கங்கை மணிமாறன்,
தீங்கனிச் சாறெனத் தேங்கமழ் புதுக்கவிப்
பாங்குறச் செய்யுள் படைக்கும் கவிஞர், புலமை
வேங்கடா சலம், தமிழ் வீறெலாம் சொலியக்
கார்முகில் கவிமழை பொழியும் கவிஞர்
சீர்நிறை கண்ண புரக்கண் ணன், வான்
அமிழ்தெனச் சுவைக்கவி அலங்கல் புனையும்
தமிழ்ப்பா வலர்தே சந்திரன் எனும் பேர்
மறுவிலாக் கவிஞர் அறுவரை முறையால்
வருக வருகென வரவேற்கின்றேன்
கவியரங்கச்சுவை செவிய றங்கேற
குவிந்தமைந் திருக்கும் அவையினர், ஆன்றோர்
அத்தனைப் பேரையும் அகமகிழ் கூர
வருக வருகென வணங்கி அன்புடன்
வரவேற்கின்றேன் வருக வணக்கம், நன்றி.

22—4—84 ச. பாலசுந்தரம்

விநாயகப் பெருமான்.

(ஓர் ஆய்வுக் கட்டுரை)

வித்வான் பெ. கு. வரதராசன், எம். ஏ., பி. டி.,

இந்துமதம் தோற்றமும் அழிவுமில்லாத இறைத்தன்மை கொண்டதாகும். இம்மதம் தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறுவாரிலர். தோற்றுவித்தவர் யார் என்பதும் துணிந்து கூறப் படாத தொன்றாகும். இம்மதம் மற்ற மதங்களிலுள்ள கருத்து களையும், மற்ற மதத்தினர் வழிபட்டுவந்த கடவுளர்களையும், அக் கடவுளர்களைப் பற்றிய கதைகளையும் ஏற்றுத் தனதாக்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றதாகும். பௌத்த மதத்தினரும் சமண மதத்தினரும் யானை, நாகம், தாமரை போன்றவற்றை மங்கலப் பொருள்களாகக் கருதுகின்றனர். புத்தர் மகாவீரர் ஆகியோர் சிற்பங்களில் யானை, நாகம், தாமரை போன்ற உருவங்களைக் காணலாம்.

புத்தர் உருவச் சிலைகளுக்குப் பின்னால் யானை, இருப்பது போலவும் சிற்பிகள் செதுக்கியுள்ளனர். தலைமைக்கும் ஆற்றலுக் கும் ஒருகுறியீடாக யானையைச் சிற்பமாகச் செதுக்கி அதை நாளடைவில் போற்றிக் காத்து வந்துள்ளனர். புத்தருக்கும் மகாவீரருக்கும் தந்த சிறப்பினையும் மதிப்பினையும் பௌத்தர்களும் சமணர்களும் யானையாக வடிக்கப்பட்ட சிற்பங்களுக்குத் தந்து அவற்றை வணங்கத் தலைப்பட்டனர். இந்த நிலை கி. பி. முதல் நூற்றாண்டில் கனிஷ்கர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. பௌத்த சமயத்தின் புதிய பிரிவான மகாயானம் தொடங்கியபோது புத்தர் கடவுளாக ஏற்றுக்கொள்ளப் பட்டார். அவருக்குத் திரு விழாக்கள் நடத்தப்பட்டன. கோயில்களும் கட்டப்பட்டு புத்தர் உருவச் சிலைகளை மக்கள் வணங்கினர். புத்தருடன் செதுக்கப் பட்ட யானையும் மக்கள் வழிபாட்டில் இடம் பெற்றது,

மகாயானத்திற்கும் இந்து மதத்திற்கும் அதிக வேறுபாடில்லாத படியால் பௌத்த மதம் தன் செல்வாக்கை இழந்தது. பௌத்த மதத்திலிருந்து வந்த சிறப்புக் கொள்கைகளான கொல்லாமை, இன்னா செய்யாமை புலனடக்கம் போன்றவைகளை இந்து மதம் ஏற்றுக்கொண்டது. அக்காலச் சூழலில்தான் இந்து மதம் புத்தரை வழிபாடு செய்யும் பழக்கத்தையும் ஏற்றுக்கொண்டது. சிற்பிகள் செதுக்கிய புத்தர் உருவமும் உடனிருந்த யானையின் உருவமும் ஒன்ருகக் கலந்த நிலையில் யானை முகத்தோடு கூடிய விநாயகப்

பெருமானின் உருவம் வழிபாட்டில் இடம் பெற்றது. அரச மரத் தடியில் விநாயகர் அமர்ந்திருப்பது புத்தர் அமர்ந்திருக்கும் நிலையை நினைப்பிப்பதேயாகும்.

"கணபதியின் சிற்பம் முதன்முதல் 2-ஆம் நூற்றாண்டில்தான் காணப்படுகிறது. 4-ஆம் நூற்றாண்டில்தான் முழு உருவமும் உறுப்புகளும் காணப்படுகின்றன. பிள்ளையாருக்கு யானை முகமொன்றே என்று எண்ணலாகாது. திருச்செங்காட்டங் குடியில் நரமுக விநாயகராய் அவர் விளங்குவது சிற்ப அருமைகளில் ஒன்று". [1]

யானை முகத்துடன் கூடிய விநாயகரன்றி மனித வடிவில் உள்ள விநாயகரையும் விநாயகர் என்றே கூறி வழிபட்டதாகத் தெரிகிறது. அந்த விநாயகரை நரமுக விநாயகர் என்றும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.விநாயகருக்குக் கணபதி என்ற ஒரு பெயரும் வழங்கியது. ஐந்து தலைகளைக் கொண்டு சிங்கத்தின் மேல் விளங்கும் ஹேரம்ப கணபதி— பாலகணபதி — ஊர்த்துவ கணபதி முதலிய மூர்த்திகளு முண்டு.

"கணபதியை ஜைனர்களும், அவர்களைவிட பௌத்தர்களும் கொண்டாடுகிறார்கள். இந்தியாவில் மட்டுமல்லாமல் திபெத்து, பர்மா, ஜாவா,இந்தோசீனா, ஜப்பான் முதலிய இந்து பௌத்த நாகரிக மணம்வீசும் எல்லா நாடுகளிலும் கணபதி போற்றப்படு கிறார்". [2]

"இந்துக்களில் சிலர் கணபதியையே பரம்பொருளாக வழிபட்டு வருகிறார்கள். அவர்களது வழிபாட்டிற்குக் 'காணபதம்' என்று பெயர். காணபதர் காணபதத்தினை மேற்கொண்டவர்கள். இவர்கள் கணபதியின் பெயர்க்கும் கணபதியின் உறுப்புகளுக்கும் தத்துவப் பொருள் கூறுகின்றனர். 'கணபதி' என்னும் பதத்திலுள்ள 'க' என்பது மனோ வாக்குகள்; 'ண'என்பது அவற்றைக் கடந்த நிலை. அவ்விரண்டுக்கும் ஈசன் 'கணேசன்' சிலர் 'க' என்பது அறிவு; 'ண' என்பது வீடு என்று கொண்டு அறிவிற்கும் வீட்டிற்கும் உரிய தெய்வம் என்று கூறுகின்றனர்". [3]

விநாயகரைப் பற்றிய செய்தி வேதங்களில் இல்லை; சங்க நூல்களிலுமில்லை. விநாயகர் வழிபாடு ஏழாம் நூற் றாண்டிற்குப் பிறகே தமிழ்நாட்டில் இடம் பெற்றதாகத் தெரிகிறது. அதற்கு முன்பு விநாயகர் வழிபாடு இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. கணபதி பூஜையில் இப்பொழுது சொல்லும் மந்திரம் கூட அக்காலத்தில் பிரமணஸ்பதி என்ற தெய்வத்திற்கே ஏற்பட்ட

தாகும். தமிழகத்தில் வாழ்ந்த பௌத்தர்களுக்கான பௌதாயன தருமசூத்திரம் போன்ற நூல்கள் விநாயகரை இடையூறுகளை யுண்டாக்கும் பூதமாகவும், அப்பூதத்தைச் சாந்தபபடுத்த பூஜை செய்ய வேண்டுமென்றும் கூறுகின்றன. இவ்வாறு செய்யப்படும் பூசனைகளினால் சாந்தமடைந்த விநாயகர் யாருக்கும் எவ்வித இடையூறும் செய்வதில்லையாகையால் அவரே பின்னர் விக்கினத் தைப் போக்கும் தெய்வமாக-விக்கினேசுவரராகப் போற்றப்படும் கடவுளாகிறார்.

''காணபதர்களுக்கு ஆதாரமான நூல்கள் கணபதி உபநிடதம். ஹேரம்ப உபநிடதம் என்ற இரு உபநிடதங்கள். கணேச புராணம், ஸ்காந்தத்திலுள்ள கணேச மான்மியம், பிர்மனகவர்ந்த புராணத் திலுள்ள கணேச காண்டம், முத்கல புராணம் என்ற புராணங்களும், கணேச கீதை, கணேச தந்திரம், கணேச கல்பம், கணேசார சந்திரிகை முதலிய தனி நூல்களுமாகும்''.[4] இவையனைத்தும். வடமொழி நூல்கள். தமிழில், திருவாவடுதுறை, கச்சியப்ப முனிவர் பாடிய பார்க்கவ புராணம் என்னும் விநாயக புராணமாகும். சக்திகள் ஐம்பத்தொருவகை என்றும் அதனால் கணபதியையும் ஐம்பத்தொருவகை என்றும் ராகவப்பட்டர் என்பவர்'சாரதா திலகம்' என்ற நூலின் உரையில் கூறுகிறார்.

இவ்வைம்பதினொரு கணபதிகளுள் சந்தான கணபதி, சுவர்ண கணபதி, நவநீத கணபதி, ஹரித்ரா கணபதி,மகா கணபதி,உச்சிஷ்ட கணபதி என்ற அறுவரும் குறிப்பிடத்தக்கச் சிறப்புடையவர்கள் ஆவார்கள். பொதுவாக அனைவராலும் வணங்கப்படுபவர்கள் மகா கணபதியும், உச்சிஷ்ட கணபதியுமே ஆவர்.

'விநாயகப் பெருமானுக்கு சுமுகர், ஏக தந்தர், கபிலர், கஜகர்ணிகர், லம்போதரர், விகடர், விக்கினராசர், கணாதிபர், தூமகேது,கணாத்யகஷர். பால சந்திரர், கஜாநநர், வக்கிரதுண்டர், சூர்பகர்ணர், ஏரம்பர், ஸ்கந்த பூர்வர் என்ற பதினாறு மூர்த்தங் களுமுண்டு.''[5]

''விநாயகர்'' தன்னை வணங்கினவர்களுக்கு விக்கினத்தை நீக்குவோரும்,அவ்வகை வணங்காதவர்களுக்கு விக்கினத்தைத் தரு பவரும், தனக்குமேல் நாயகர் இல்லாதவருமாதலால் இப்பெயர் வந்தது. இவர் இந்திரன் வேண்டுகோளுக்கிணங்கி அகத்திய முனி வரிடமிருந்த கரக நீரைக் காக உருக்கொண்டு கவிழ்த்து அவன் சீகாழியில் வைத்த நந்தவனத்தைச் செழ்ப்பித்தனர். இதனால் அகத்தியர் கோபங்கொண்டு குட்ட வர, அவர் கைக்குத் தப்பித்

தரிசனம் தந்தவர். பார்வதி பிராட்டியார் திருவயிற்றிலிருந்து சிந்துரனால் தலை நீக்கி மயேச்சுரன் தலையைப்பூண்டு, சிந்துரனைத் திலகமாய்ப்பூண்டவர். பரசுவ முனிவர் ஆசிரமத்தில் வளர்ந்து விக்கினராசர் எனப்பெயர் பெற்றவர். இவர் சித்தி, புத்தி, வல்லபை மோதை, பிரமோதை, சுமகை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருகாடை, சுமத்திமை, நந்தினி, காமதை முதலியவர்களை மணந்தவர். இவர் பஞ்ச கிருத்தியமும் செய்து நாயகமாய் நிற்றலின் இவரே பரம் என்பர் காணாதிபத்ய மதத்தவர் இவரை பிரமன், விஷ்ணு, தக்கன், கற்கலன், வீமன், இந்திரன், உருத்திரன், உமை, கர்த்தமன், நளன், சந்திராங்கதன், சண்முகர் மன்மதன், ஆதிசேடன், புருசுண்டி, அங்கராசன், சந்திரன், கிரகப் பிரசாதன், கிருதவீரியன், ஆரசேனன், பரசுராமன், இராவணன், அகத்தியன், காசிபன் முதலியவர்கள் பூசித்து இட்ட சித்தியடைந் தனர்.

"**கணபதி** :- செந்தாமரைக் கமலத்தில் பதுமாசனராய், நான்கு திருக்கரங்களிலும் யானைக் கொம்பு, பாசம், அங்குசம், மாம்பழம் உடையவர். பிரதம மகாசிருஷ்டியில் சிவமூர்த்தியின் திருக் கண்டத்து உதித்தவர். தேவர் முதலியவர்களுக்குத் தலைவராய் முடி சூட்டப்பட்டவர். இவரது இச்சா–கிரியா சக்திகள் சித்தி–புத்தி எனக் காணபத்திய மதம் கூறும்". [6]

"**விகடசக்கர விநாயகர்** :- வீரபத்திரர் தக்கனைத் தலை நீக்கிய காலத்துத் திருமால் எறிந்த சக்கராயுதத்தை அவர் அணிந்த சிர மாலைகளில் ஒன்று கவ்வியது. அதைப்பெறும்படி விஷ்வச் சேனர் கொங்கணிக் கூத்தாடினார். இதைக் கண்டு நகைத்த சிரத்தின் வாயினின்று சக்கரம் விழக்கண்ட விநாயகர் அதனை எடுத்துக்கொண்டு அக்கூத்தைத் தம்முன் ஆடப் பணிக்க அவர் ஆடியபின் களிப்படைந்து சக்கரம் தந்தனர். இவ்வகைச் சக்கரத் தின் பொருட்டு விகடஞ் செய்ததால் விகடசக்கர விநாயகர் எனப் பெயர் வந்தது". [7]

"திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்". [8]

காஞ்சிபுரத்தில் ஏகாம்பர நாதர் ஆலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்.

விக்கினராசர் :- விநாயக மூர்த்திக்கு ஒரு பெயர். இவர்

வரேணிய ராசன் தேவி புட்பதை என்பவள் கருவுயிர்த்த காலையில் அப்புத்திரனை மறைத்து யானை முகத்துடன் தாம் குழந்தை உருக்கொண்டு இருந்தனர். அரசன் கண்டு, காட்டில் இட்டுவரக் கட்டளையிட்டனன். அவ்வகை ஏவலாளர் குழந்தையைப் பராச முனிவர் ஆச்சிரமத்து அருகு வைத்துவிட்டு வர முனிவர் கண்டு வளர்த்து வந்தார். அவ்வகை இருக்கையில் பெருச்சாளி உருக் கொண்ட கிரௌஞ்சன் விநாயகர் எழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தையடைந்து முனிவர்களைத் தொந்தரவு புரிதலைக் கண்டு அவனை வாகனமாகக் கொண்டு வலியடக்கி இருடிகளின் வேண்டுகோளால் காலரூபி என்னும் மறுபெயர் பெற்று விக்னனை வலியடக்கி, அவன் வேண்டிக்கொள்ள உயிருடன் விட்டு விக்கினராசர் எனத் திருநாமம் பெற்றார்''. [9]

'**வக்கிரதுண்டர்** –: இவருக்கு ஐந்து சிரம், பத்துக் கை. இவர் துராசாரனைக் கொன்று, அவனைக் காலில் மதித்து எந்நாளு மிருக்க வரம் அளித்தவர். இவருக்கு உருண்டி விநாயகர் என்றும் பெயர். ஒரு கற்பகத்தில் திருமூர்த்திகளைத் தமது துதிக்கையால் எடுத்து விழுங்கி விராட்டுருவாய் நின்றவர் ''. [10].

''**சுமுகர்** :– கபில முனிவர் வைத்திருந்த சிந்தாமணியின் பொருட்டுக் கணன் முதலியவர்களைச் சங்கரிக்க மலர்ந்த முகத்துடன் கபில முனிவர்க்குத் தரிசனந் தந்ததால் பெற்ற பெயர் ''. [11].

''**கபிலர்**:- விநாயகருக்கு ஒரு பெயர். கர்த்தமப் பிரசாபத்திக்குத் தேவ பூபதியிடம் உதித்த விஷ்ணுவின் அம்சம். இவர் தாய்க்குத் தத்துவம் உபதேசித்தவர். இவர் தாயின் அனுமதி பெற்று வட திசையணுகிச் சமுத்திரராசனால் கொடுக்கப்பட்ட இடத்தில் யோகம் பூண்டிருந்தனர். இவர் பாதாளத்துத் தவஞ் செய்திருக்கையில் இந்திரன் சகரரை வஞ்சித்துக் குதிரையை இவருக்குப் பின் கட்டினர். அசுவமேதக் குதிரையைத் தேடிச் சென்ற சகரர் இவர்க்குப் பின் இருந்த குதிரையைக் கண்டு சந்தேகித்து அவரை வருத்தினர். அதனால் கபிலர் கோபித்து விழித்தனர். அந்தக் கோபாக்கினியால் சகரர் நீறாயினர். இந்திரன் இவரிடம் வர, அவனுக்கு உணவளித்து சிந்தாமணி பெற்றார். சாங்கிய யோகம் இருடிகளுக்கு உபதேசித்தவர். இவருடன் இராவணன் சண்டைக்கு வந்து இவரது திருமேனியின் சுவாலையால் ஒளி மழுங்கிச் சோர்ந்து இலங்கைக்குச் சென்றான் ''. [12].

''**தூமகேது** :– தூமாசுரன் முற்சனனத்தில் விகுதி என்னும் அரசன். இவன் இந்திர பதம் பெற யாகம் முடித்துக் கடைசி யாகஞ்

செய்கையில் இந்திரனால் ஏவப்பட்ட நாரதர் இவனிடஞ் சென்று இவன் மனைவியைக் கேட்க இவன் மறுத்தமையால் யாகத்தை யழித்து மறுசனனத்தில் அசுரனாகச் சபித்தான். இவன் அசுரனாய்த் தேவ இருடியை வருத்தி வருகையில் அசரீரி, சுமுதையிடம் பிறக்கும் சிசு உன்னைக் கொல்லும் எனக் கேட்டுச் சுமுதையையும் அவள் கணவன் மாதவராசனையையும் மஞ்சத்துடன் காட்டிற்குக் கொண்டுபோய்விட, அவ்விடம் விநாயகமூர்த்தி இவர்களுக்குக் குழந்தையுருவாய் தரிசனந்தந்து வளர்ந்துவந்தனர். இவர் வளர்ந்து அநேக அசுரரைக் கொன்ற செய்தியை மாதவராசன் கேட்டுச் சண்டை செய்யவர விநாயகமூர்த்தி தமது வாயில் புகையை உண்டாக்கிச் சேனை முழுவதையும் கொன்றனர். இதனால் விநாயகருக்குத் தூமகேது மூர்த்தி என ஒரு திருநாமம் உண்டாயிற்று ". [13].

"**கணாதிபர்** :- ஒருகாலத்தில் பார்வதியார் தனித்திருக்கையில் சிவமூர்த்தி துவாரபாலகர் தடுக்கவும் அந்தப்புரம் சென்றதால் பார்வதியார் தம்முடையவனாயொரு காவல் நிருமிக்க எண்ணித் தமதுடம்பின் அழுக்கைத் திரட்டிச் சிவமூர்த்தியை தியானித்து யானை முகத்துடன் பிரணவாகாரமாய் ஒரு புத்திரனை சிருஷ்டித்து கையில் ஒரு தண்டங் கொடுத்து துவாரத்திலிருந்தனர். இவர் தேவராதியரை வெற்றி பெற்றுப் பின் சிவபெருமானால் காணாதிபத்தியமும் எல்லாத் தேவர்களுக்கு முதலில் பூசிக்கும் பெருமையையும் பெற்றனர். சிவபெருமான் கணபதிக்கும் குமாரக் கடவுளுக்கும் மணம் முடிக்க வேண்டி, எவன் பூப்பிரதக்ஷனம் முதலில் வருவானோ அவனுக்கு முதலில் மணவினையெனக் கந்தமூர்த்தி பூப்பிரதக்ஷனம் பொருட்டு முன் சென்றனர். கணபதியோ ஸ்நானம் முடித்துத் தாய் தந்தையிருவரையும் வலம்வந்து முன்னின்று உங்களையன்றி வேறுலகங் கண்டிலேன் என்றனர். இதனால் களிப்படைந்த தாய் தந்தையர் கணபதிக்கும் சித்தி, புத்தி என்பவர்களை மணம் செய்விக்க அவர்களிடம் லாபன், லக்ஷன் என்னும் இரண்டு குமாரர்களை கணபதி பெற்றனர்". [14]

"**பாலசந்திரர்** :- விநாயகர் சிறுபிள்ளையாய்ச் சென்று அனலாசூரனை விழுங்கி அவன் வெப்பத்தைச் சகித்துச் சந்திரனைப் போலக் குளிர்ந்திருந்தமையாலும், மாதவராசனும் சுமுதையும் காட்டில் தனித்திருந்து துன்பப்படுகையில் அவர்களுக்குக் குழந்தையுருவாய்க் காட்சி தந்து இடுக்கண் நீக்கியதாலும் பெற்ற பெயர்". [15]

"**ஏரம்ப விநாயகர்** :- பிரமன் பூசித்த விநாயகர் ஒருவேதியன் திருக்காஞ்சியில் சிவாராதனம் செய்து பேறு பெற்றவன்". [16].

ஏகதந்தர் ;- கயமுகாசூரனைக் கொல்லத் தந்தங்களில் ஒன்றை விட்டெறிந்தமையால் அது தொடங்கி விநாயகருக்கு இப் பெயர் உண்டாயிற்று". 17

விநாயகரது அவதாரச் சிறப்புகளையும் பலவாறான திரு நாமங்களைப் பெறுவதற்கான காரணங்களையும் கண்டோம். இவையனைத்தும் புராணக்கதைகள் கூறும் செய்திகளேயாகும். இவையன்றி விநாயகர் தோன்றுதற்கான வேறு ஒரு காரணத்தை ஞானவாரமுதுண்ட திருஞான சம்பந்தர் திருவலிவலம் பதிகத்துள் 5வது பாடலில் விளக்கிக் காட்டுகிறார். சைவ சமய குரவர்களில் முதலாக வைத்து எண்ணப்படுபவர் ஞானசம்பந்தப் பெருமான். அவரது திருநெறிய தமிழ் இறைவன் உணர்த்த மொழிந்தவை.

'பழுதில் இறை எழுது மொழி தமிழ் விரகன்
வழிமொழிகள் மொழி தகையவே' (18)

அன்றோ? அவர் கூறுவதைக் காண்போம்.

''பிடியதன் உருஉமைகொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலிவலம் உறை இறையே'' (19)

உமாதேவியார் பிடியுருக்கொள சிவபெருமான் கரியாகித் தனது அடியினை வழிபடும் அடியவர்களது துன்பத்தை நீக்கும் கணபதிவர அருளினன் என்பது மேற்கண்ட பாடலின் பொருள். இதனையும், இதன் வாயிலாக உணர்த்தப்படும் கணபதியின் தோற்றத்தையும் மறைமலையடிகள் சாடுகிறார்.

அவருடைய விளக்கத்தினையும் காண்போம். ''ஒலியின் தோற்ற இயக்கங்களின் அமைப்புகள் அத்தனையும் இறைவனால் வகுக்கப் பட்டிருந்தலானும், புறத்தும் அகத்தும் நிகழும் ஒலியின் தோற்ற இயக்கங்கள் எல்லாம் இறைவனருளாலன்றி நிகழப் பெறாமை யானும், இறைவனுக்கு ஒலி அல்லது பிரணவமும் ஒருவடிவெனச் சைவ சித்தாந்த நூல்கள் நுவலா நிற்கும். எல்லா ஓசைகளுக்கும் எல்லா ஒலிகளுக்கும் முதலோசையாய் நிற்பது 'ஓ' என்று இரையும் ஒலியேயாகும். எல்லா ஓசைக்கும் முதலோசையாய் நிகழும் இவ் வோங்கார ஒலி இடைவெளியிலுள்ள அணுக்களின் இயக்கத்தால் உண்டாவதாகும். அணுக்களோ புள்ளி வடிவனவாகும். அவ் வணுக்களின் இயக்கமோ வரிவடிவினதாகும். இங்ஙனம் புள்ளியும் வரியுஞ்சேர்ந்த சேர்க்கையே, பிள்ளையார் சுழி எனவும், வரியை

வளைத்தெழுதி ஓங்கார எழுத்தெனவும் கொள்ளப்படா நிற்கின்றது. இங்ஙனம் வட்டமும் வரியுங்கூடிய அமைப்பே சிவலிங்கமெனவும் நுவலப்படுகின்றது. யானையின் முகமும் அம் முகத்திலிருந்து தொங்கும் தும்பிக்கையும் வட்ட வடிவமும் வரிவடிவும் சேர்ந்த ஓங்கார வடிவாயிருத்தலின், அவ்வொலி வடிவில் நிற்கும் கடவுளை யானை முகமுடையவராக வைத்து அறிவு நூல்கள் கூறுகின்றன. இவ்வாறெல்லாம் ஓங்காரவடிவின் வடிவின் மேன்மையையும் பயனும் உணர்ந்த சான்றோர்கள் அவ் வடிவின்கண் இறைவனை வைத்து எளிதாக வழிபட்டு உய்தற் பொருட்டாகவே யானைமுகமுடைய பிள்ளையார் வழிபாட்டை உண்டாக்கினார்கள். இவ்வளவிற் கடவுளிலக்கணத்திற்கு மாறான தொன்றும் பிள்ளையார் வணக்கத்திற் காணப்படவில்லை''.[20]

மறைமலையடிகள் கூறிய செய்தி ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவலிவலம் தேவாரப் பாடலுக்கு முரண்பட்ட தாக விருப்பினும் கணபதியின் தோற்றத்திற்குப் பிறகு சைவ அன்பர்கள் கணபதியை ஓங்கார வடிவில்தான் கண்டனர் என்பதை ஏற்றுக் கொள்ளுவதாகவே அமைந்துள்ளது.

''விநாயகப் பெருமானுடைய ஊர்தி பெருச்சாளி என்பதை யாவரும் அறிவோம். பெருச்சாளி என்பது நமக்குள் இருந்துவரும் நம்மை அழிக்கும் கள்ளத்தன்மையான உலகப்பற்று என்றும், விநாயகர் உண்ணும் மோதகம் இன்பத்தை பயக்கும் ஞானம் என்றும் கூறுவர்''.[21]

''பெருச்சாளி கீழறுத்துச் செல்லும் கேண்மையுடையது. கீழறுத்தலென்பது பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே வேண்டும் பொருளை மீட்டுக் கொள்ளல். நகரமாகிய மறைப் பாற்றல் மாசுடனின்றே மலப்பகைபோக்கி ஆருயிரை மீட்டுக்கொள் ளும் மெய்மை பெருச்சாளியால் காட்டப்படும்.

''மாயை வினைசார்ந்து மலமறுத்தல் கீழறுத்தல்
ஆயதொழி லாம்பெருச் சாளியுறு—தூயதிரு
முன்பாய்நல் லூர்தியாய் மூழ்க முதல்வனடி
இன்பம் சுவையுடனும் ஏத்து''.[22]

பெருச்சாளியை விநாயகப் பெருமான் தனது ஊர்தியாக ஆக்கிக் கொண்டமைக்கு மேற்கூறிய இரு காரணங்கள் தரப்படுகின்றன. விக்கினராசர் என்ற தலைப்பில், விநாயகப் பெருமான் தங்கியிருந்த பராசமுனிவர் ஆச்சிரமத்திற்கு கிரௌஞ்சன் என்ற அரக்கன் பெருச்சாளி உருக்கொண்டு வந்து முனிவர்களைத் தொல்லை

படுத்தினான் என்றும் விநாயகர் அவ்வரக்கனைத் தன் வாகன மாகக் கொண்டு அவனது வலியடக்கினார் என்றும் ஒரு வரலாறு கண்டோம்.

அரக்கனை வலியடக்கித் தன் வாகனமாகக் கொண்ட வரலாற்றினை முதலிற் கொண்டு பெருச்சாளி கீழ் நோக்கி பூமியை அறுத்துச் செல்லும் கேண்மையடையது என்றும் அதனால் ஒரு தத்துவத்தைக் கற்பிப்பதைப் பின்னும் கொண்டதாகக் கருத இடமுள்ளது.

'குள்ளக் குள்ளனே — குண்டு வயிறனே
வெள்ளிக் கொம்பனே — விநாயகனைத் தொழ'

என்ற இவ்வெளிய பாடலைத் தாய்மார்கள் சிறு குழந்தைகளிடம் கறி அவர்களைத் திரும்பத்திரும்ப அப்பாடலைக்கூறும்படி பழக்கு வதைநாம் பார்த்திருக்கின்றோம். விநாயகப்பெருமான் நாளடை வில் தமிழகத்துக் குடும்பங்களில் எத்துணைச் சிறப்பான இடத்தை பெற்றுள்ளான் என்பதற்கு இதுவே நல்ல சான்றாகும்.

சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமான் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இடம் பெற்றபின் விநாயகருக்குச் சைவசமயத்தவர் தந்த ஏற்றம் அவரை மிகவும் உயர்த்திவிட்டது. ஆம், சைவக் கோயில் இடம்பெற்ற மலையினது உச்சியில் பிள்ளையாரே வீற் றிருப்பார். அவ்வாறு கோயில்கொண்டிருக்கும் பிள்ளையாருக்கு உச்சிப்பிள்ளையார் என்பது பெயர். திருச்சிராப்பள்ளியிலும் திருச் செங்கோட்டிலும் உச்சிப்பிள்ளையாரைக் காணலாம். பிள்ளையாரை ஞானத்தின் சிகரமாகத் தமிழர்கள் கருதியதால் அவருக்கு உயர்ந்த இடத்தினை அளித்தனர்.

எக்காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வழிபட்டே தொடங்குதல் வேண்டும் என்ற நம்பிக்கை எல்லாரிடத்திலும் நிலைபெற்றது இதனால் பிள்ளையார் காப்புக் கடவுளானார். எல்லா நூல்களிலும் காப்புச் செய்யுள் நூலின் முதலிடத்தைப் பெற்றது. வழிபடுகடவுளாக இல்லாவிட்டாலும் அனைவர் உள்ளத் திலும் ஏற்புடைக்கடவுளாக விநாயகப்பெருமான் இடம் பெற்றுள்ளார்.

விநாயகப்பெருமானின் சிறப்புகளைக் கூறியும் அவனது அருளை வேண்டியும் பிற்காலத்தில் எழுந்த பாடல்களும் சிறு பிரபந்தங்களும் ஏராளம். விநாயகர் பற்றிய பாடல்களும் பிரபந்தங் களும் திருமுறையில் இடம் பெற்றிருப்பதை யாவரும் அறிவோம்,

அருணகிரிநாதரின் "கைத்தல நிறை கனியப்ப மொடவல் பொரி எனத்தொடங்கும் திருப்புகழை அறியாதாரும் உளரோ? இவை யன்றி விநாயகர் தோத்திரப் பாடல்களைக் கொண்ட நூல் பட்டிய லொன்று தரக் காண்பீர்கள்.

"1.	திருநாரையூர் திருவிரட்டை மணிமாலை	— நம்பியாண்டார் நம்பி
2.	விநாயகர் திருவிரட்டை மணி மாலை	— ,, ,,
3.	விநாயகக் கடவுள் தோத்திரப் பிரபந்தத் திரட்டு	—
4.	விநாயக சதுர்த்தி பூஜாக் கிரமம்	— இராமலிங்க தேசிகர்
5.	விநாயகர் தோத்திரத் திரட்டு	— த. சுப்பராய முதலியார்
6.	விநாயக சங்கிரகம்	— சுவாமிநாத பிள்ளை
7.	விநாயக மான்மிய சாரம்	— புங்கத்தூர் ஆறுமுக முதலியார்
8.	விநாயக மூர்த்தங்களில் அகவல்	
9.	விநாயகர் அகவல்	— ஔவையார்
10.	வேழமுகம்	— ,,
11.	விநாயகர் சொரூப நிர்ணயத் தோத்திர அகவல்	— தெய்வநாயக முதலியார்
12.	விநாயாகர் திரிபு வெண்பா வந்தாதி	— பூ. ஆறுமுகம் பிள்ளை
13.	விநாயகர் போற்றிக் கலி வெண்பா	— சிவானந்த முதலியார்
14.	விநாயகர் பதிகம்	— க. சுப்பிரமணிய முதலியார்
15.	விநாயகர் பேரில் பதிகம்	— மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
16.	விநாயகரனுபூதி	— மணிமங்கலம் திருவேங்கடமுதலியார்.
17.	நாரிலிநாயகர் பதிகம்	— அ. வரதநஞ்சய பிள்ளை
18.	விநாயகர் அனுபூதி	— முட்டம் தமிழேந்தியார்
19.	வெள்ளைவிநாயகர் எச்சரிக்கை	— வீரபத்திர பிள்ளை
20.	வெள்ளை விநாயகர் பதிகம்	— ,, ,,
21.	வெள்ளை விநாயகர் கலிவெண்பா	— ,, ,,
22.	வெள்ளை விநாயகர் பஞ்சரத்தினம்	— ,, ,,

23. வெள்ளை விநாயகர் பஞ்சரத்தினம் — குமரகுருபர ஐயர் "(23)
24. விநாயக பிரவாக விளக்கம் — கருங்குழி ஏகாம்பர முதலியார் "(24)
25. சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை — டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்"
26. விநாயகர் சந்தப்புகழ் — ,, ,,
27 விநாயகர் அட்ட புட்பமாலை — பெ. கு. வரதராசன்

இதுகாறும் நாம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக கணபதியை வழிபடுகின்றவர் காணபதர் எனப்படுவார்கள் என்றும், இந்து மதம் பிறமதக் கடவுளர்களிடமிருந்து எடுத்துக்கொண்ட ஒன்றே கணபதியாகுமென்றும், கணபதி வழிபாடு இந்து மதத்தில் கி பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து வட நாட்டில் இடம் பெற்றுள்ளது என்றும், இந்து பௌத்த நாகரிக மணம் வீசும் எல்லா நாடுகளிலும் கணபதி போற்றப்படுகிறார் என்றும், கணபதியைப் பற்றிய செய்தி வேதங்களிலும், சங்க நூல்களிலும் இல்லை என்றும், தமிழகத்தில் விநாயகர் வழிபாடு கி. பி. 7ஆம் நூற்றாண்டில்தான் கால் கொளத் தொடங்கியது என்றும், தொடங்குகிற காரியங்களில் இடையூறு செய்யாதிருக்க விநாயகரை வணங்க வேண்டுமென்ற நம்பிக்கை ஏற்பட்டதால் அனைவரும் விக்கினேசுவரை வணங்கினர் என்றும், வடமொழியில் கணபதியைப் பற்றிப் பேசப்படும் புராணங்கள் பல உள்ளனவென்றும் தமிழில் விநாயகபுராணம் என்று ஒன்று உண்டு என்றும், கணபதிக்குப் பல பெயர்கள் வழங்கப் படுகின்றனவென்றும், ஒவ்வொன்றிற்கும் காரணம் கற்பிக்கப் பட்டிருக்கிறதென்றும், ஞானசம்பந்தரின் திருவலிவலம் பதிகத்து 5வது செய்யுளை உரையளவையாகக் கொண்டு கணபதியின் தோற்றத்தை நாம் அறிதல் வேண்டும் என்றும், கணபதியின் தோற்றப் பொலிவினை ஓங்கார வடிவமாகக் கொள்ளுவோம் என்றும், அதன் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுவே பிள்ளையார் சுழி என்றும் நாளடைவில் தமிழகத்தில் பிள்ளையார் வழிபாடு குழந்தைப் பருவத்திலேயே தாய்மார்களால் பயிற்றுவிக்கப்பட்டதென்றும், பிள்ளையாருடைய வாகனம் பெருச்சாளியென்றும், கிரௌஞ்ச அசுரனை அடக்கிப் பிள்ளையார் தன் வாகனமாக்கிக் கொண்டார் என்றும் பிற்கால நூல்களினால் விநாயகப் பெருமானது பெருமையும் தோற்றப் பொலிவும் பேசப் படுகிறதென்றும், விநாயகர் விரும்பி உண்ணும் உணவு உடலுக்கு நோய் செய்யாதவை என்றும், விநாயகரை வணங்குவதால் நினை வாற்றல் உண்டாகும் என்றும் வினைவலி கெட சுகவாழ்வு பெறலா மென்றும் அறிகிறோம்.

அடிக் குறிப்புகள்

1. கலைக் களஞ்சியம் தொகுதி மூன்று பக்கம் 127
2. ,, ,, ,, ,, 127
3. ,, ,, % ,, 126
4. ,, ,, ,, ,, 127
5. அபிதான சிந்தாமணி பக்கம் 1440
6. ,, ,, ,, 323
7. ,, ,, ,, 1417
8. கந்தபுராணம் காப்புச் செய்யுள் — கச்சியப்பச் சிவாச்சாரியர்.
9. அபிதான சிந்தாமணி பக்கம் 1419
10. ,, ,, ,, 1368
11. ,, ,, ,, 702
12. ,, ,, ,, 335
13. ,, ,, ,, 886
14. ,, ,, ,, 324
15. ,, ,, ,, 1099
16. ,, ,, ,, 282
17. ,, ,, ,, 217
18. மூன்றாந்திருமுறை—வழிமொழித் திருப்பதிகம் — பாடல் 12
19. முதல் திருமுறை திருவலிவலம் பதிகம் — பாடல் 5
20. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா-கழக மறுபதிப்பு—மறைமலையடிகள் பக்கம் 78-79
21. கலைக் களஞ்சியம் தொகுதி மூன்று பக்கம் 126
22. செந்தமிழ்ச் செல்வி— சிலம்பு 41 பரல் 6 பக்கம் 245
23. தமிழ் நூல் விவர அட்டவணை Vol. I Part III பக்கம் 80
24. ,, ,, ,, Vol. II Part I பக்கம் 53
25. தமிழ்ப்பா மஞ்சரி டாக்டர் உ. வே. சா. வெளியீடு நெ. 26.

சோழபுரத்துக் கோயில்கள்

டாக்டர் இரா. கலைக்கோவன்

குடந்தையிலிருந்து அணைக்கரை செல்லும் பாதையில், குடந்தையிலிருந்து ஒன்பதாவது கிலோமீட்டரில் அமைந்துள்ள சிற்றூர்தான், சோழபுரம் இவ்வூரில் நான்கு கோயில்களும், இவ்வூரை அடுத்துள்ள மானம்பாடியில் ஒரு கோயிலுமாய் மொத்தம் ஐந்து கோயில்கள் இங்குக் காணப்படுகின்றன. இவற்றுள் நான்கு கோயில்கள் சோழர் காலத்தவை. சோழபுரத்தின் மேற்குப் பகுதியில் காணப்படும் வெங்கடாசலபதி கோயில் இடிந்து, அழிந்து, முற்றிலும் சிதிலமாகியுள்ளதால் இதன் தோற்றக் காலத்தைக் கணக்கிட முடியவில்லை.

சோழபுரமும், மானம்பாடியும் இணைந்து 'வீரநாராயண புரம்' என்றழைக்கப்பட்ட செய்தி மானம்பாடியிலுள்ள கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுக்கள், இணைந்த நிலையில் இருந்த இவ்வூர்களை 'இளைச்சிக்குடி' என்றும் குறிப்பிடுகிறது. இளைச்சிக்குடி அல்லது வீரநாராயண புரம் என்று அழைக்கப்பட்ட இவ்வூர், இன்று இரண்டு சிற்றூர்களாகப் பிரிந்து சோழபுரம் என்றும் மானம்பாடி என்றும் அழைக்கப்படுகிறது.

சோழபுரத்தில் காசி விசுவநாதர் கோயில், கைலாசநாதர் கோயில், பைரவர் கோயில், வெங்கடாசலபதி கோயில் என்னும் நான்கு கோயில்களும் மானம்பாடியில் நாகநாதசாமி கோயிலும் அமைந்துள்ளன. இவற்றுள் வெங்கடாசலபதி கோயில் அழிந்து விட்டது. காசி விசுவநாதர் கோவிலும், பைரவர் கோயிலும் அழிந்து கொண்டிருக்கின்றன. பார்க்கக்கூடிய நிலையில் இருப்பது கைலாசநாதர் கோயிலும், மானம்பாடி நாகநாதசாமி கோயிலும் தான். இவ்விரண்டிலும்கூட நாகநாதசாமி கோயில் தக்கக் கவனிப்பைப் பெறவில்லை. இப்படியே விட்டால் கல்வெட்டுச் சுரங்கமாய்க் காட்சியளிக்கும் இந்தக் கோயிலும் அழிந்து போகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஓரளவு பாதுகாப்புடனும், கவனத்துடனும் போற்றப்பட்டு வரும் கோயில கைலாசநாதர் கோயிலாகும். இக்கோயில் சோழபுரத்தின் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கிய நிலையில் அமைந்துள்ளது. இக்கோயில் நாங்கள் சென்றபோது மூடியிருந்தது. கொரநாட்டுக் கருப்பூர்த் திருக்கோயிலைச் சேர்ந்த பணியாளர்

திரு. இராமமூர்த்தி எங்களுடன் வந்திருந்தார். அவர், கோயிலுக்கு அருகில் அமைந்திருந்த வீட்டில் குடியிருக்கும் திரு. உமாபதி என்னும் தமிழாசிரியரை எங்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு சிவாச்சாரியாரைக் கூட்டிவரச் சென்றுவிட்டார். திரு. உமாபதி செஞ்சொற்கொண்டல், முனைவர், சிங்காரவேலனாரின் தமையனார் மகன்; மிக்க அன்பும் நட்புணர்வும் கொண்டவர். நான் ஒரு மருத்துவன், கோயில் கலைத்துறையில் ஆர்வமுள்ளவன் என்றதும் அவருக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கும், வியப்புக்கும அளவேயில்லை. சில மணித்துளிகளில் நாங்கள் நட்பானோம் அவரின் அருமைத் தந்தையாரையும் சந்தித்து உரையாடி மகிழ்ந்தோம்.

சிவாச்சாரியார் வந்ததும் கோயிற் கதவுகள் திறக்கப்பட்டன. கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்ததும் மையக்கோயில், மாடக் கோயில் போன்ற உயர்த்தப்பட்ட அமைப்புடன் விளங்குவதைக் கண்டோம். வெளித்திருச்சுற்றில் மேற்குப் பகுதியில் பிள்ளையார், முருகன், யானைத்திருமகள் போன்ற தெய்வங்களின் சுற்றாலைக் கோயில்கள் காணப்படுகின்றன. வடக்கில் மையக்கோயிலை ஒட்டிச் சண்டேசுவரருக்கான உட்கோயிலும், அதையடுத்து கிழக்கு நோக்கிய நிலையில் அம்மன் கோயிலும் அமைந்துள்ளன.

சிவபூரணி அம்மன் என்ற திருப்பெயருடன் விளங்கும் அம்மன் திருக்கோயிலின் முன் மண்டபம் மிகப் பிற்பட்ட காலத்து அமைப் புடன் வண்டிக்கூடு போன்ற கூரையுடன் விளங்குகிறது கருவறை யும், உள் மண்டபமும் கருங்கல் திருப்பணி முன் மண்டபத்தில் சனீசுவரர் திருமேனியும் இலிங்கத்து திருமேனியும் நிறுவப்பட்டு இருப்பது வியப்பை தருகிறது. ஆகம வழக்கத்துக்கு மாறான இந் நிறுவல்கள் எப்படி ஏற்பட்டன, எப்போது ஏற்பட்டன என்பது அங்கிருந்த யாவருக்கும் தெரியவில்லை. கருவறையின் புறச் சுவர்களில் தேவகோட்டங்கள் இருக்கின்றன. ஆனல் அவற்றுள் தெய்வதிருமேனிகள் இல்லை. இரண்டுதள விமானத்தில் சாலை களும், கர்ண கூடுகளும் உள்ளன. வட்டமான சிகரம் இக்கோயிலின் கருவறை உள்மண்டபமும் ஒரு காலத்திலும், முன்மண்டபம் ஒரு காலத்திலுமாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். மையக்கோயிலின் கட்டட அமைப்புடன் இக்கோயில் அமைப்புமுறை எவ்விதத்திலும் பொருந்துவதாய் இல்லாமையின், மையக்கோயில் கட்டப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பிறகே தேவியின் இக்கோயில் கட்டப் பட்டிருத்தல் கூடும் என்று துணியலாம்.

வடகிழக்குப் பகுதியில் பிள்ளையாருக்கான சிறுகோயில் ஒன்றும், வடகிழக்கு மூலையில் பைரவர் கோயிலும், ஆடவல்லான்

அம்பலமும் காணப்படுகின்றன. அம்பலத்தைச் சுற்றி உள்திருச் சுற்று அமைந்துள்ளது.

மையக் கோயில், மாடக் கோயில் போன்ற அமைப்புடன் காணப் படுகிறதே தவிர, மாடக் கோயில் அல்ல. துணைத்தளமும், தாங்கு தளமும் உயர்த்திக் கட்டப்பட்டிருப்பதால், மிக உயரமான நிலையில் பல படிக்கட்டுகளில் ஏறிச் செல்வதுபோல் இக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது. கோயிலின் முன் நீட்டல் மகாமண்டபமாய் அமைந்துள்ளது. இதன் தென்புறமும், வடபுறமும் ஏறிச்செல்ல பக்கத்திற்கு பதிமூன்று படிகள் உள்ளன. தரை மட்டத்தில் இம் மண்டபத்திற்கு முன் நந்தியும், பலிபீடமும் உள்ளன. இம்முக மண்டபத்தைக் கடந்ததும், முன் மண்டபம் கம்பிக்கதவுடன் அமைந்துள்ளது.

உள் மண்டபத்து வாயிலின் இருபுறமும் வாயிற்காப்போர் காணப்படுகின்றனர். இங்குப் பல செப்புத்திருமேனிகள் காணப் படுகின்றன. இவற்றுள் பல பிற்காலத்தைச் சேர்ந்தவை. சிவகாமி அன்னையின் செப்புத் திருமேனி ஒன்றுமட்டும் தான் சோழர் காலத்ததாகக் கருதப்படுகிறது. தலையில் கரண்டக மகுடமும், கழுத்தில் கண்டிகை. சரப்பளி முதலியனவும் கொண்டு அதிக நகைகளும், ஆடம்பரமும் இன்றி, எளிமையும், அழகுமாய் ஆக்கப் பட்டிருக்கும் இச்செப்புத் திருமேனியின் வலக்கரம் அலவன் முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கரம் தொங்கும் கரமாக உள்ளது. தாமரைத் தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இவ்வழகுப் படிவம் காண்போரைக் கவர்ந்திழுத்து கருத்திழக்க வைக்கவல்லது.

கருவறையில் இறைவன் கைலாசநாதராய், லிங்கத்திரு மேனியராய் எழுந்தருளியுள்ளார். கருவறையின் புறச்சுவர்களில் தென்புறம் பிள்ளையாரும், தென்திசைக் கடவுளும காணப்படு கின்றனர். மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும், கொற்றவையும் காணப்படுகின்றனர்.

மையக்கோயிலின் விமான அடித்தளம், அதாவது தாங்கு தளம் அழகிய வடிப்புகளுடன் உள்ளது. தாமரை வடிப்பு இரண்டும் அழகுபட அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலே யாளிவரிமானம் அமைந்துள்ளது. இவ்வரிமானம் கூடும் முனை களில், சிறு கூடுகளில், அழகிய சிற்றுருவச் சிற்பங்கள் காணப் படுகின்றன. அரைத்தூண்களும், பலகையும் அழகுபட வடிக்கப் பட்டுள்ளன.

விமானம் ஒருதள விமானமாக உள்ளது. சாலைகளும், கர்ண கூடுகளும் அமைந்துள்ளன. சிகரம் எண்பட்டை வடிவில் அமைந்

துள்ளது. இக்கோயிலில் பல உதிரிச்சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தென்திசைக் கடவுளின் சிற்பம் ஒன்று விரிந்த முடியமைப்பும், இடது காலைக் குத்திட்டு, வலதுகாலை நீட்டி அமர்ந்திருக்கும் கோலமும், புதுமையும சிறப்புமாய் உள்ளன. இந்த அமைப்பு முறை மிக அருமையாகவே நம் கோயில்களில் காணப்படுகிறது. இந்த அழகிய சிற்பம் இக்கோயிலில் கவனிப்பாரின்றிக் காணப்படுவது துன்பத்தைத்தருகிறது. பழங்கதைகள் பேசுவதில் மட்டும் தீராத ஆர்வம் காட்டும் நம்மவர்கள், பழமைகளைப் போறறிப் பாதுகாப்பதில் ஆர்வம் கொள்ளாதிருப்பது ஏனெனபதுதான் விளங்காத புதிராய் உள்ளது.

இக்கோயிலின் எப்பகுதியிலும் கல்வெட்டுக்கள் காணப்படவில்லை கல்வெட்டுக்கள் இருந்து அழிந்தனவா, அல்லது வெட்டப்படவேயில்லையா என்பது புரியாத புதிராக உள்ளது. அரசு ஆவணங்களிலும், கல்வெட்டுப்புத்தகங்களிலும் இக் கோயில்கள் குறிப்பிடப்படாமையே இங்கிருந்து கல்வெட்டுக்சள் எக்காலத்தும் படியெடுக்கப்படவில்லை என்பதற்குப்போதிய சான்றாகும். சோழபுரத்தில் இருக்கும் மற்ற இரண்டு கோயில்களும் கலைவரலாற்று ஆய்வாளர்களின் கண்களில் இரத்தத்தை வரவழைக்கும் நிலையில் உள்ளன. ஒருகாலத்தில் இந்த மண்ணை யாண்ட நம் மூதாதையர்கள் எத்தனையோ அரும்பாடுபட்டுக் கட்டிவைத்த கோயில்களைப் பாதுகாக்கும் நிலையில் கூட இன்று நாமில்லை என்பதை நினைக்கும்போது ஆழ்ந்த துன்பம் ஏற்படுகிறது. நம்மால் இதுபோல் சிற்பக் களஞ்சியங்களை உருவாக்கத்தான் முடியாது, இருப்பனவற்றையாவது பேணிக் காக்கலாம் அல்லவா! ஆடம்பர விழாக்களுக்கு அள்ளி இறைக்கும் பணத்தால் இந்த அழகமைந்த ஆனல் அழிந்து கொண்டிடிருக்கும் கோயில்களைப் பாதுகாக்கலாமே. பாதிக்குமேல் இடிந்து சிதைந்த கோயில்களை முழுவதுமாகவே இடித்து நிரவிவிடலாம்; அது தவறில்லை. இறைவன் வாழ்ந்த அல்லது வாழ்ந்து கொண்டிருக்கும் இடங்கள் இப்படி வெளவால் கூடங்களாக, இயற்கையின் அழைப்புக்கு மனிதர்கள் இணங்கும் இடங்களாக மாறிவிடக்கூடாது. அரைகுறையாய் நிற்கும் இக்கோயில்களை ஒன்று வேதியியல் முறையில் காப்பாற்றிக் கட்டமைத்துக் காட்சிக் கூடமாக்கலாம். அல்லது இங்குள்ள சிற்பங்களை அருங்காட்சியகங்களில் சேர்ப்பித்துவிட்டு இவற்றைத் தரைமட்டமாக்கி விடலாம். பைரவர் கோயிலில் நுழைந்து பார்க்கவே அஞ்சும்படி கூரைக்கற்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. மண்ணில் கூட வளரத்தயங்கும் மரங்கள், இறைவன் வாழும் இக்கோயில்

சுவர்களில் எத்தனைக் கிளைத்து, எத்தனைக் செழித்து வளர்ந்துள்ளன! நம் கண்முன்னே நம் வழிமுறை, பண்பாடு, கலையமைப்பு எல்லாமே அழிந்து கொண்டிருக்கின்றன. வேடிக்கை பார்த்துக் கொண்டே விட்டுவிடப் போகிறோமா அல்லது விழித்தெழுந்து ஏதேனும் வழிகாணப் போகிறோமா! காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இங்குள்ள காசி விசுவநாதர் கோயில் மக்களால் புறக்கணிக்கப் பட்ட நிலையில் அழிந்து கொண்டிருக்கும் காட்சி துன்பமானது. இக்கோயிலின் கோபுரமற்ற நுழைவாயிலில் நுழைந்ததும் மையக் கோயிலைக் காணலாம். இக்கோயிலின் மகாமண்டபம் சுவர்கள் இடிந்து, கூரையின்றிச் சிதிலமாய்க் காணப்படுகிறது. கருவறையில் இறைவன் காசிவிசுவநாதர் என்ற பெயரில் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். கருவறையின் புறச்சுவர்களிலுள்ள தேவ கோட்டங்களில் வடபுறம் நான்முகன் வடிவம் உள்ளது. மேற்குப் புறத் தேவகோட்டம் வெறுமையாக உள்ளது. தென்புறக் கோட்டத்தில் அமைந்திருந்த தென்திசைக் கடவுளின் படிமம் அக் கோட்டத்திற்குக் கீழே மண்ணில் புதைந்த நிலையில் உள்ளது. விமானம் ஒருதள அமைப்புடையது. இதன் கழுத்தும், சிகரமும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. தென்மேற்கு மூலையில் பிள்ளையார் வடிவம் உள்ளது. வடமேற்கு மூலையில் கழுத்துவரை மண்ணில் புதைந்த நிலையில் யானைத்திருமகளின் சிற்பம் காணப் படுகிறது.

அழகிய தாங்குதளம், தாமரை, கண்டம், அல்லி வடிப்புகளுடன் அமைந்துள்ளது. இத்தாங்கு தளத்தில் ஒரு கல்வெட்டு காணப் படுகிறது.[1] 'புகழ் சூழ்ந்த புணரி' என்ற முதற் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியுடன் காணப்படும் இக்கல்வெட்டு, அம்மன்னனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. வீரநாராயணபுரத்து ஊரவையார், இக்கோயிலுக்காகச் சிலரால் வாங்கப்பட்ட நிலங்களின் வரிகளைக் குறைத்த செய்தியைக் கூறும் இக்கல்வெட்டில், இக்கோயில் குலோத்துங்க சோழீசுவரம் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. வீரநாராயணபுரத்தை, மிழலைநாட்டு, வடகரை விருதராச பயங்கர வளநாட்டைச் சார்ந்த பகுதி என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. 'விருதராச பயங்கரன்' என்பது முதலாம் குலோத்துங்கனின் சிறப்புக்குரிய பட்டப்பெயர் களுள் ஒன்று என்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

---

1. ARE 99 of 1927

இக்கோயிலில் காணப்படும் இந்த ஒரே கல்வெட்டினாலும், இதில் காணப்படும் 'குலோத்துங்க சோழீச்சரம்' என்ற பெயராலும் இக்கோயில் முதற்குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது. கட்டட அமைபபிலும், தெய்வ வடிவங்களின் இட அமைப்பிலும், கலை அமைதியிலும் கைலாசநாதர் கோயில் இக்கோயிலைப் பெருமளவு ஒத்திருப்பதால் அதனையும் முதற்குலோத்துங்கன் காலத்துக் கோயிலாக கொள்ள லாம்.

கைலாசநாதர் கோயிலுக்குப் பக்கத்தில், கோயிலை எளிதில் நெருங்க முடியாதபடி, பொது மக்களால் அனைத்துத்திசைகளிலும் ஆக்கிரமிபபு செய்யப்பட்டிருக்கும் நிலையில் பைரவர் கோயில் அமைந்துள்ளது. அக்கோயிலைச் சுற்றியுள்ள நிலப்பகுதி முழுவதும் பொதுமக்களால் கை கொள்ளப்பட்டு குடிசைகளும் கட்டடங்களும் எழும்பியுள்ளன. எஞ்சியுள்ள பகுதி தோட்டமாக்கப்பட்டுள்ளது. இக்கோயிலைப் பார்வையிட வேண்டுமானால் இதனைச் சுற்றி யமைந்த வீட்டுக்காரர்களில் யாறேனும் ஒருவரின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்களின் வீடு அல்லது தோட்ட வழியாகத்தான் இக் கோயிலை நெருங்க முடியும். ஒரு கலைக்கோயிலுக்கு நேர்ந்து ள்ள இந்த தாழ்வான நிலைக்கு யாரை நோவது? கைலாசநாதர் கோயிலின் சிவாச்சாரியார் திரு சுவாமிநாத குருக்களின் துனை யுடன் வழியறிந்து, அனுமதி பெற்று இத்திருகோயிலை அடைந்த போது மனம் துன்பத்தாலும் துடிப்பாலும் பதறியது. மிக அழகான கற்றளி! இயற்கையின் கரங்களிலும், இங்குள்ள மனிதர்களின் அலட்சியப் போக்கினாலும் இக்கோயில் அடைந்துள்ள சேதங்களை எண்ணெனபது! திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுதித் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் மேற் கொள்ளப்பட்ட கோயிலாம் இது.[2] இதன் இன்றைய நிலையைப பார்க்கும் போது இதை எந்தத் துறையும் மேற்கொண்டதாகவோ அல்லது எந்த துறையாலும் இக்கோயில் பாதுகாக்கப்படுவதாகவோ நம்ப முடியவில்லை.

ஒரு காலத்தில் முகமண்டபமாக இருந்த இடம் இப்போது கூரையின்றித் திறந்த வெளியாய், முட்புதர்களின் காடாய்க்காணப் படுகிறது. இதையடுத்துள்ள முன்மண்டபத்திற்கும் பாதிக்கூரை யில்லை. கற்கள் நழுவிச்சிதிலமாய் உள்ளது. இம்மண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் வழி அமைந்துள்ளது. உள்மண்டபத்திற் கான வாயிலை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். உள்

2, Latter Chola Temple. S.R Balasubramanian Page110-111

மண்டபத்திற்குள் உடன் வந்தவர்கள் என்னை நுழையவிடவில்லை காரணம் கூரை சிதிலமாகிக் கற்கள் தொங்கிக் கொண்டிருக்கும் துன்பமான நிலைதான். எந்தநேரம் எந்தக்கல் விழுமோ என்ற அச்சம் நெஞ்சில் கருக்கொள்கிறது. கருவறை உள்மண்டபப் புறச் சுவர்களில் உள்ள தேவகோட்டங்களை அழகிய சிற்பங்கள் அணி செய்கின்றன. உள் மண்டபத்தின் தென்புறச்சுவரிலும் வட புறச் சுவரிலும் பக்கத்திற்கு மூன்றாய்க் கோட்டங்கள் உள்ளன. தென் புறக்கோட்டங்களில் முறையே பிள்ளையார், ஆடவல்லான், கங்காள மூர்த்தி வடிவங்களும், வடபுறக்கோட்டங்களில் கங்கையை ஏற்கும் அண்ணல், கொற்றவை, அம்மையப்பர் திருமேனிகளும் காட்சி தருகின்றன.

கருவறைப் புறச்சுவர் கோட்டங்களில், தென்புறம்தென்திசைக் கடவுளும், மேற்கில் லிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர்.

கருவறைக்கும் உள்மண்டபத்திற்கும் இடைப்பட்ட அந்த ரர்ளத்தின் புறச்சுவரில் உள்ள கோட்டங்களின் தென்புறம் பிச்சையுகக்கும் பெம்மானும், வடபுறம் பைரவரும் காணப் படுகின்றனர். இது சற்று மாறுபட்ட அமைப்பாகும். பொதுவாக இப்பகுதியிலுள்ள புறச்சுவரில் கோட்டங்கள் அமைவதோ, அவற்றுள் தெய்வ வடிவங்கள் அமைவதோ எல்லாக் கோயில்களிலும் காணக் கூடிய அமைப்பல்ல. இது இக்கோயிலின் தனித்தன்மையாக உள்ளது.

இங்குள்ள பைரவர் வடிவம் எட்டுக்கரங்களுடன் காணப் படுகிறது. வலது கரங்களில் முத்தலை ஈட்டியும், வாளும், துடியும் உள்ளன. மூன்றாவது கரத்தில் உள்ள கருவி தெளிவாகத் தெரிய வில்லை. இடது கரங்களில் தலையோடு, கேடயம், பாம்புப்பாசம், தண்டு முதலிய கருவிகள் உள்ளன.

இங்குள்ள சிற்பங்களில் மிக அழகானது ஆடவல்லானின் அமைப்பான தோற்றம்தான். கருணை பொலிந்த முகத்தோற்றமும், இலேசாகச் சிரித்த இதழ்களும், காக்கும் வலது முன்கரமும், வீசிய வேழக்கரமாய், இடது முன்கரமும், காணக்காண கண்ணில் நிறையும் காட்சியாய் இறைவனின் ஆடல் அமைந்துள்ளது.

அடிமுதல் முடிவரை கருங்கல்லால் ஆன இக்கோயிலின் ஒருதள விமானத்தில் சாலைகளுக்கும், கர்ணக்கூடுகளுக்கும் இடையில் பூத கணங்களின் அழகு கொஞ்சும் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன,

பூதகணங்களைக்கூட இத்தனை அழகுடன் அமைக்க முடியுமா என்பதற்கு இவை சான்றுகளாய் நிற்கின்றன. இவற்றுள் ஒன்று கீழே விழுந்து கிடப்பது, ஒரு குழந்தை படுத்திருப்பதைப் போல் காட்சி தருகிறது. வாயில் சங்கினை வைத்து ஊதுவதுபோல் இவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விமானத்தில் கழுத்தும் சிகரமும் எண்பட்டை வடிவில் அமைந்துள்ளது, குறிப்பிடத்தக்கது. அழிந்த நிலையிலும் அழகாய் தோன்றும் இக்கோயில் மீண்டும் தொல்பொருள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நிலையாகப் பாதுகாக்கப்படுமானால் இந்த நாட்டின் சிறப்புக்கும், பெருமைக்கும் உரிய பல புதிய அமைப்பு களுடன் கூடிய கலைக்கோயிலைக் காப்பாற்றிய பெருமை நம்மைச் சேரும்.

அம்மன் கோயில் மையக்கோயிலின் வடபுறத்தில் தெற்குப் பார்த்த நிலையில் அமைந்துள்ளது. இதன் உள்மண்டபமே அழிந்துவிட்டது. விமானம் மட்டும் அப்படியே இருக்கிறது. கட்டட அமைப்பு முறை கொண்டு இதைப் பிற்காலத்ததாகக் கொள்ளலாம்.

காசி விசுவநாதர் கோயில், கைலாசநாதர் கோயில், பைரவர் கோயிலென்று தற்போது அழைக்கப்படும் சிவன் கோயில், இம் மூன்று சைவ கோயில்களுமே ஒரே மன்னர் காலத்தில் செய்யப்பட்ட வையாகத்தான் இருக்க வேண்டும் கல்வெட்டுச் சான்றுகள் இல்லாத நிலையில், கைலாசநாதர் கோயிலும் பைரவர் கோயிலும் அருகருகே அமைந்திருப்பது கொண்டும், அவற்றின் கட்டட அமைப்பு, தேவகோட்டச் சிற்பங்களின் எண்ணிக்கை அமைப்பு முறை விமான அமைப்பு இவற்றைக் கொண்டு ஆராயும் போது தற்போது சிந்தாமணி அகரம் போன்ற குலோத்துங்கனின் பிற கோயில்களுடன் இவற்றுக்குள்ள ஒற்றுமையை அறியலாம். காசி விசுவநாதர் கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டே காணப்படுகிறது. இங்குள்ள மானம்பாடிக் கோயிலிலும், முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுக்கள் பல உள்ளன. இப்பகுதியில் முதலாம் குலோத்துங் னின் காலத்தில் கோயில் கட்டும் பணி மிகச் சிறப்பாகச் செயல்பட்டமைக்கு மேலைக்கடம்பூர் இன்னொரு சான்றாகும். இவற்றையெல்லாம் கொண்டு நோக்கும்போது சோழபுரத்துக் கலைகோயில்களை எழுப்பிய மாமன்னன் முதலாம் குலோத்துங்கனே என்று எளிதாய்த் துணியலாம்.

தமிழர் பண்பாட்டில் தூவுதல்

இராஜ். பவுன்துரை

சமூகத்தின் நாகரிகம், பண்பாட்டு மரபினைக்காட்டவல்லன. அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளுமாகும். பொதுவாக நம்பிக்கைகள் மக்களால் கற்பிக்கப்பட்டு சமுதாயத்தால் புரக்கப்படுவன எனலாம். ''நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்சவுணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காட்சிதருகின்றன. இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாதபோதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனிதமனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக்கொள்கின்றது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன''.[1]

வாழ்த்துதல், வழிபாடுசெய்தல், வழிபாட்டில் பலியிடுதல் எனும் பல்வகையான முறைகளில் ''பொருட்களைத் தூவுதல்" எனும் மரபைக் காணமுடிகின்றது. சிலநேரங்களில் நம்பிக்கையின் அடிப்படையிலும் வேண்டுதல் நிலையிலும் அவை இடம்பெறுவன உடம்பில் பரு அல்லது சிற்சில சிறிய நோய்கள் ஏற்படின் அவற்றைப் போக்க உப்பு, மிளகு போன்றவற்றைத் தூவி வணங்கும் முறையும் உள்ளது. உப்பிட்டு வணங்கும்முறையைப் பொதுவாகத் தமிழரிடம் அதிகம் காணலாம். திருமணக் காலத்தில் உப்பைப் பரப்பி அதன் மீது மணமகன் கால்வைத்துத் தாலிகட்டும் மரபு இன்றும் மதுரை மாவட்டத்தில் வாழ்கின்ற 'பிரமலைக் கள்ளர்' எனும் பிரிவினரிடையே காணமுடிகின்றது புதுமனைபுகும் நாட்களில் கடுகு தூவி தீய சக்திகளை அகற்றுதல் எனும் முறையை அறிய முடிகின்றது. தமிழர் பண்பாட்டில் பொருட்களைத்தூவி வழிபடும் முறை தொன்று தொட்டு வருகின்ற மரபாகவே உள்ளது இவ்வாறு தூவி வழிபடும் முறையில் நிறம் பற்றிய பண்பாட்டையும் அறிய முடிகின்றது. தூவும் பொருளின் நிறம் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுவதாகும்.

பொருட்களைத் தூவி வாழ்த்துதல், வழிபடுதல் எனும் மரபில் அரிசி, நெல், மலர், நீர், வெண்கடுகு. உப்பு, மிளகு மற்றும் நவதானியங்களும் இடம்பெறுகின்றன. இம்முறையானது

1. வளமை (Fertility) வேண்டியும்
2. தீய சக்திகளிடமிருந்து காத்தல் வேண்டியும்

பின்பற்றப்படுகின்றது எனலாம்.

நெல்லும் மலரும்

வளமை அல்லது வளர்ச்சியினை வேண்டி அமைகின்ற திருமணத்திலோ அல்லது வழிபாட்டிலோ முறையே நெல்லும் மலரும், நெல்லும் நீரும் தூவி வாழ்த்திய மற்றும் வழிபட்ட மரபு சங்கத் தமிழர் மரபாகும்.

தூவி வாழ்த்தும் முறை பண்டைய நாகரிகங்களில் பழமையான வழக்கம். தமிழர் நெல்லும் மலரும் தூவி வாழ்த்துதல் போன்றே இந்தோனேசியா, சிங்கப்பூர், மலாய் போன்ற நாடுகளிலும் மற்றும் சில நாடுகளிலும் தானியங்களுடன் பழங்களையும் இணைத்துத் தூவுகின்றனர்[2] என்பதை அறியமுடிகின்றது.

நெல்லும் மலரும், நெல்லும் நீரும் தூவி வாழ்த்திய செய்தியை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

" கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை "

(அகம் : 86 : 13–17)

எனவரும் தொடரால் நீருடன் நெல்லும் மலரும் சேர்த்துத் தூவி வாழ்த்தியதைக் காணமுடிகின்றது.

"நெல் நீ ரெறிந்து விரிச்சி ஓர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"

(புறம் ; 280 : 6-7)

என வரும் வரிகள் நெல்லையும் நீரையும் சொரிதலைக் காட்டுகிறது. நெல்லின் நிறம் 'பொன்' அல்லது 'மஞ்சள்' நிறமாகும். மஞ்சள் நிறமுடையது நெல் அது நீரில் கரைத்தாலும் அந்நிறம் மாறாது. எனவே மங்கலப் பொருளாகக்கண்டனர்.

அரிசியும் மலரும் :

சாதாரணமாக நெல்லை மட்டும் அல்லது நீரைமட்டும் தூவும் முறையைக் காணமுடியவில்லை. சில சடங்குகளால் மந்திரித்த நீர் அல்லது மஞ்சள் கலந்த நீர், மஞ்சள் நிறமூட்டப்பட்ட அரிசி ஆகியவற்றையே தூழவும் முறையுள்ளது. நெல்லின் மேலுரையாகி உமி சென்றுவிட்டால் வெண்மை நிறமுடையதாக ஆகிவிடுகின்றது. எனவே மங்கலப் பொருளைக்கொள்ள மஞ்சள் நிறமூட்டப் படுகின்றது.

நெல்—வளமையைக் குறிக்கும் குறியீடாகவும் உள்ளது.[3] அதில் மஞ்சள் கலந்துகொள்வது என்பது புனிதம், அல்லது மங்கலம் வேண்டித் தூவுவதாக அறியமுடிகின்றது. மஞ்சள் மங்கலத்தைக் குறிக்கும்; எனவே அரிசியில் மஞ்சள் கலப்பது என்பது மங்கல வாழ்க்கை வளமை கூடட்டும் எனும் கருத்தில் ஏற்பட்டதாகக் கருதலாம். மேலும் அரிசி உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் அடிப்படைத் தேவைகளையும் மஞ்சள் வாழ்க்கையைப் பொலிவூட்டத் தேவைப்படும் எழிற்பொருள்களையும் சுட்டும். வாழ்த்தப்படுபவர் அவ்விரண்டும் முழு அளவில் பெற்று வாழ வேண்டும் என்பதே மஞ்சளரிசி தூவி வாழ்த்துவதன் உட்பொருளாகும்.

அரிசியை தூவும் முறையானது பல பழங்குடி மக்களிடமும் இருப்பதை அறிய முடிகின்றது 'கொடுவாணியர்' எனும் மலையின மக்களிடையே இப்பழக்கம் உள்ளது. இவர்களுடைய திருமணத்தில் ''பந்தலில் நுழைந்ததும் தாம்பாளத் தட்டிலிருக்கும் 'பச்சரிசியை' எடுத்து அவர்கள் உட்காரும் முக்காலியின் மேல் மும்முறை தூவுகிறார்கள்.[4] 'ஏரவாளர்'[5] எனும் மலையின மக்களிடம் இம்முறையைக் காணமுடிகின்றது. பெரியோர்கள் திருமணத்தன்று மாப்பிள்ளையின் மீது வாழ்த்துக்கு அறிகுறியாக மஞ்சள் அரிசியைத் தூவுவார்கள்

குருதிதூவுதல் :

வெற்றி பெறுவதற்காகவும், வெற்றி பெற்றதற்காகவும் பலியிடுதலே பண்டைய மரபு எனலாம். வேட்டைக் காலத்தின்போது ஏற்பட்ட வேப்பமரத்துத் தெய்வத்தின் கோபத்தை நீக்க வேண்டி

வயவால் எறிந்து வில்லின் நீக்கி
பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்பு ஆ எறிந்து குருதி தூஉய்
புலவுப் புழுக்கு உண்டவான்கண் அகல்அறை

(அகம் : 309)

குருதிதூவி வழிபட்டனர் என்பது காணப்படுகின்றது. இவ்வாறு தூவுதல் என்பது மரங்களில் தெய்வமுறையும் எனும் நம்பிக்கையில் அமைந்த செயலாகும்.

குருதியோடு விரவிய அரிசி:

விழாக் காலங்களில் பல்வகையான வழிபாட்டு முறைகளைச்

செய்கின்றனர் பொதுவாக பண்டைய தமிழகத்தில் விழாக்களில் பலியிடும் மரபு இருந்துள்ளதை அகநானூற்றுப் பாடல் காட்டும்.[6]

பண்டைய தமிழர்கள் விழாக்காலங்களில் ஊன்,[7] கள்[8] முதலியவற்றைப்பயன்படுத்தியமையை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன விழாக்காலங்களில் குருதியோடு விரவிய அரிசி பற்றிய செய்தி இலக்கியத்தில் கிடைக்கின்றது.

''மதமலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியோடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்விரப் பிரீஇச்''[9]

எனவரும் தொடரால் குருதியோடு விரவிய அரிசியைத் தூவி வழிபட்டமை தெளிவாக்கப்படுகிறது.

தினையும் மலரும்:

விழாக்காலங்களில் வழிபாட்டு முறையில் அரிசி பயன்பட்டது போன்று தினையும் இடம் பெறுகின்றது. தினையுடன் மலர் சேர்த்துத் தூவி வழிபட்டதை

''சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"

(திரு. 218-220)

எனவரும் வரிகளால் அறியலாம். பொதுவாக மலர் தூவுதல் நிறத் தொடர்பாக ஏற்பட்டதாகக் கூறலாம். அவை இறைத் தொடர்புடையன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் குறிப்பிட்ட மலர் சுட்டப்படுவது ஆய்விற்குரியதாகும்.

குருதியோடு விரவிய தினை:

வெறியாட்டு என்பது பழந்தமிழரின் தனித்த வழிபாடாக கருதப்படுகிறது. இவ்வழிபாட்டு முறை மலைவாழ்வோராகிய குறிஞ்சி நில மக்களுக்குரிய சிறப்புடைய வழிபாட்டு முறையாகும். பொதுவாகத் தெய்வத்தை கழுவாய் செய்து வழிபடுவதற்கும் வெறியாட்டுவதற்கும் பயன்படும் இடத்திற்குக் 'களம்' என்றும் வெறியாட்டு அயரும் களத்தையே 'வெறிக்களம்' அல்லது 'வெறியியல் களம்' என்றும் கூறப்படும். வெறியாட்டிற்குளிய காலம் நள்ளிரவாகக் கொண்டமையால் இதற்கு 'நடுநாள்' எனப் பெயர் கூறினர். இதனை

"நெடுவேட் பேணத்தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களம் நன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப்பாடி வலிகொடுத்து
உருவச் செந்தினை குருதியோடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்"

(அகம் : 22 : 6-11)

எனவரும் அகநானூற்றுப் பாடலால் அறியமுடிகின்றது. இங்கு குருதியோடு விரவிய தினையைப் பற்றிய செய்தி கிடைக்கின்றது.

வெறியாட்டு வழிபாட்டு முறையில் பலியிடுதல் என்பது ஒரு முறையாக அமைகின்றது. பலியிடுதல் பண்டைய சமுதாயத்தில் தெய்வத்தை அமைதிப்படுத்துவதாகக் கருதி வழிபடும் ஒருவகை முறையாகும். வெறியாட்டில் தினையினை நீரோடும் குருதியோடும் விரவி வழிபடுவது "தெய்வத்திற்குப் படைத்தல்'' எனும் நிலையிலே அமைகின்றது.

செந்நெல் வான் பொரி :

வெறியயர் களத்தில் செந்நெல் வான் பொரி தூவப்பட்டமையை உவமை நிலையில் குறுந்தொகைப் பாடல் வரிகளால் உணர முடிகின்றது.

எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண் மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறியன்ன
எக்கர் நண்ணிய எம்மூர்

(குற. 53 : 1-5)

எனும் தொடரால் வெறியயர் களந்தோறும் செந்நெல் வான்பொரி தூவியதை அறியமுடிகின்றது. இவ்வாறு தூவப்படுவது பலியிடும் களத்திலுள்ள பிற தெய்வங்களையும் ஆவிகளையும் கட்டுப் படுத்துவதற்குரிய சடங்கு நிகழ்ச்சியாக கருதத்தக்கது.

இம்முறையே இன்று பேயோட்டலின்போது பொரி போடப் படுவதாகும். பேய்களின் கவனத்தைத் திருப்பும் வண்ணம் பொரி போடப்படுவதாகக் கூறப்படுகின்றது. பேய்களின் சக்தியைக் கொண்டு பிற மந்திர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் முறை இன்றும் காணலாம். "குரளி" எனும் மந்திரவேலையின் போது குட்டிச் சாத்தான்களுக்கு பொரி தூவும் முறையுள்ளது.

இறந்தோரை அடக்கம் செய்ய தூக்கிச் செல்லும் நிகழ்வின் போது பொரி தூவப்படுகின்றது. இறந்தோரைச் சாற்றிவைத்து சுற்றத்தார் அழுகின்ற மரபு இன்றும் உள்ளது. அந்நிகழ்வின் போது இன்றும் ''பச்சை கொண்டு வருதல்'' எனும் முறையாக த னியங்களைக் கொண்டுவந்து இறந்தோர் வீட்டில் தூவும் முறை இன்றும் உள்ளது.[10] இறந்தோரின் சடங்குகளில் அதிகமாக பொரியும் கொடுக்கப்படுகின றது.

இங்கு நாம் காணவேண்டியது கருத்துக்கள் இரண்டு (1) வாய்க்கரசி (2) கருமாந்திரம் செய்யும்பொழுது கொடுத்தல் என்பதாகும். பொதுவாக அரிசி வழங்குதல், எனபது வளமை குறித்ததாகும். பொரி தூவுதல் என்பது பேய் முதலிய தீய சக்திகளி டமிருந்து காத்தல் வேண்டியும், இறந்தோர் சடங்குகளில் மட்டுமே கொடுக்கப்படுகின்றது. தான் புகுந்து வாழ்வதற்கு ஏற்ற உடல் கிடைக்காத நிலையில்உள்ள ஆவிகள் இறந்தவரின் உடலைக் கைப்பற்றி வாழ முயலும் என்பது ஒரு நம்பிக்கை. அவ்வாறு தன் உறவினரின் சடலம் ஒரு ஆவியின்-பேயின் உடலாக மாறிவிடக் கூடாது என்பதற்காகவே பேய்களை விரட்டுவதற்குரிய பொரி அவர்களின் மீது தூவப்படுகின்றது.

ஐயவி தூவுதல்

ஐயவி தூவுதல் எனும் மரபைத்தமிழ் இலக்கியங்கள் எடுத்தி யம்புகின்றன. ஐயவி என்பது சிறுவெண் கடுகு. சிறுவெண்கடுகு தூவுதல் தீய சக்திகளிடமிருந்து காத்துக் கொள்ளுதல் எனும் முறையில் அமைகின்றது. இதனை

''இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்''
(தொல். பொருள். 77: 10-11)

எனவரும் தொடரால் போர்ப்புண் பட்டுக் கிடந்த தன் கணவனைப் பேய் தொடாதபடி விடியும் வரை மனைவியானவள் விழித்திருந்து காத்தலைக் குறிக்கும். மனையில் வேப்பிலை செறுகிக் கடிப்புகை யாகிய ஐயவி தூவி நறும்புகை எடுத்தும், இசையொலி எழுப்பியும் பாடியும் கணவனது விழுப்புண்களைப் பேய் அணுகாமற் காத்தலை இத்துறைப்பாடல் தெரிவிக்கின்றது.

'கடி' என்பது பேய்க்குறிய பெயர்களுள் ஒன்றாகும்.

''கடி வழங்கு வாயிலிற் கடுத்துயரெய்தி
இடையிருள் யாமத் தென்னையீங் கழைத்தனை''
(மணி: 6 : 142-143)

எனவரும் வரியால் கடி என்னும் சொற் பொருளை அறிய முடிகின்றது. கடிப்பகை என்பது பேய்க்குப் பகையான பொருட்களைக் குறிக்கக் கையாண்ட சொல்லாக இருக்கக்கூடும். அவ்வகைப் பொருள் என இரவம், வேம்பு, ஐயவி போன்றவற்றைச் சுட்டும் வண்ணம் குறிக்கப்படுகின்றது. இதில் காணப்படுகின்ற ஐயவி தூவும் வழக்கம் தற்காலத்தில் அதிகம் இல்லை.

வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி யணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மையாக்கைச்
சீர்கெழு மடந்தையீரிமை பொருந்த

(நற் 40 : 5-9)

எனவருகின்ற நற்றிணைப் பாடலால் வெண்கடுகைத் தலையில் தூவிக்கொள்வதைக் காணமுடிகின்றது. பேயணுகாது எனும் நம்பிக்கையில் இதனைச் செய்கின்றனர்.

''ஐயவியப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்''

எனவரும் மணிமேகலைத் தொடராலும் இம்முறை தொன்று தொட்டு வழக்கத்தில் இருப்பதை அறியமுடிகின்றது. செக்கச் சிவந்த 'தெற்றிப்பூ'க் களையும் கடுகையும் கலந்து பாதையில் இறைத்தல் முறையானது முன்பு காணப்பட்டதாகும். இறந்தவர்களை அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும் வழிநெடுக தூவப்பட்ட செய்தியுள்ளது. இச்சடங்கில் மலரைத் தூவுதல், பொரியைத் தூவுதல் அல்லது உணவுப் பொருட்களைத்தூவுதல் போன்றவற்றை இன்றும் மதுரை மாவட்டத்தில் வழக்கத்திலுள்ளதைக் காணலாம். இது கடுகினைத் தூவுகின்ற முறையிலிருந்து தொடர்ந்து வருகின்ற மரபாகவே உள்ளது எனலாம்.

நவதானியங்கள் :

இறைவழிபாட்டின்போது நவதானியங்களையும் தூவி வழிபடும்முறை காணப்படுகின்றது. விவசாயக் குடியினர் தங்களுடைய விளைச்சலின் முதல் அறுவடையைக் கதிராகவோ அன்றி ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தையோ அல்லது விளைபொருளையோ எடுத்து வைத்துக்கொள்ளும் முறை மதுரை மாவட்டந்தில் இன்றும் நடைமுறையிலுள்ளது. 'தலைக்கதிர்' சாமிக்கு எனும் மரபு இன்றும் உள்ளது. கழனியில் தானியங்களை அளக்கும் முன்னர் 'சாமிகுறுனி' என்று தானியத்தை எடுத்துவைப்பர். ஒரு குறுனி

யானது இரண்டு மரக்கால் அளவுடையது. ஒரு மரக்காலுக்கு நான்கு படியாகும்.

கதிர்களை அறுவடை செய்யும் முன்னர் "கன்னி திசையில்" முதற் கதிரை அறுவடை செய்யும் மரபு இன்றும் மதுரை மாவட்டத்தில் காணப்படுகின்றது. பழனி முருகன் கோயில் வழிபாட்டில் தானியங்களையும் விளை பொருள்களையும் பிரகாரத்தைச் சுற்றிச் செல்லும்பொழுது தூவி வழிபாடு செய்கின்றனர்.

நவகிரஹங்களுக்கும் ஒவ்வொருவகைத் தானியம் தூவி வழிபடும் முறை உள்ளது. நவகிரஹங்களை வேண்டி நவதானியங்களைத் தூவும் முறை குறிப்பிடத்தக்க ஒன்று.

சூரியன்	—	கோதுமை
சந்திரன்	—	நெல்
செவ்வாய்	—	துவரை
புதன்	—	பச்சைப்பயறு
வியாழன்	—	கொத்துக் கடலை
சுக்கிரன்	—	மொச்சை
சனி	—	எள்ளு
இராகு	—	உளுந்து
கேது	—	கொள்ளு

என ஒன்பது தெய்வங்களுக்கும் ஒன்பது வகைத் தானியங்களைத் தூவி வழிபடும் முறையுள்ளது. பொதுவாகத் தானியங்களைத் தூவி வழிபடுதல் முறையானது வளமை வேண்டியே எனலாம். இங்கு நல்விளைச்சலை வேண்டி வேண்டப்படுவதாகக் கருதலாம்.

நெல், அரிசி, பொரி, வெண்கடுகு, தினை, மலர், உப்பு, மிளகு மற்றும் நவதானியங்களைத் தூவும் மரபு தமிழரிடம் தொன்று தொட்டுக் காணப்படுவதாகும். வாழ்த்துதல், வழிபாடு செய்தல் ஆகிய இருமுறைகளில் இம்மரபு அமைகின்றது. இம்மரபு வளமை (Fertility) வேண்டியும் தீயசக்திகளிடமிருந்து காத்துக்கொள்ளுதல் எனும் நிலையையும் எடுத்தியம்புகின்றன.

அடிக்குறிப்புகள் :

1) காந்தி, க. 'தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,' உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (சென்னை) 1980, ப. 103.

2) Edward Westermark; Early Beliefs and Their Social Influence p. 135

3) "Throwing rice after a newly married couple is a very old custom The ancient threw rice at a bride and groom to distract evil spirits. Rice, a symbol of fertility among some people expresses the hope that the couple will be plessed with children."

The-new book of Knowledge—Vol. 20 P. 100-101

4) பிலோ இருதயநாத்; மேற்கு மலைவாசிகள், பக் 98

5) சக்திவேல், சு. பழங்குடிகள், பக். 91

6) மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிப்
பலிக ளார்கைப் பார்முது குயவன்
இடு பலி நுவலு மகன்றலை மன்றத்து
விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்

—நற்றிணை 293 : 1-4

7) தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் திணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயில் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே

—புறம் 33 : 19-22

8) "விழவின் றாயினும் உழவர் மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
.... கிணையேம் பெரும்."

—புறம் 384 : 8-10.

9) திரு. 224-226

10) மதுரை மாவட்டத்திலுள்ள 'பிரமலைக் கள்ளர் இனத்தினரிடையே இப்பழக்கம் இன்றும் உள்ளது. கிடைக்கப்பெற்ற தானியங்களை ஒன்று சேர்த்து அதில் ஒருபிடி தானியத்தைக் கொண்டு செடி வளரச்செய்து கருமாந்திரம் செய்யும் நாளில் எடுத்துச் செல்வர்.

கண்ணன் பாட்டு

(கண்ணம்மா — என் காதலி)

K. சோமசுந்தரம், பி. எ., பி. எல்.,

பாரதியார் கண்ணனைக் காதலியாக மகிழ்ந்து, பரபக்தி அனுபவ முதிர்வால், அன்பு செய்யும் வகையில், யாழும் குழலும் கைக்கத்திகழுமாறு பாடிய பாக்கள் யாவும், காதலன் புத்தேன் சுவையோடு கனி சொட்டும் கவியமுதமாய் காதல் விருந்தாகும். பாரதியாரது செம்மையாய சிந்தை உரத்தால் செம்மாந்து நன்மை ஞானத்தோடு இறையறிவைப் பிணைக்கும் இப்பாக்களின் ஆற்றலுக்கு இணையே இல்லை. பாரதியார் தன் வாழ்வாகிய யாழின் இதயத்தந்திகளில் காந்தமென லயப்படுத்தும் இறை பற்றிய எண்ணங்களையும், காதலுள்ளத்து அன்பையள்ளும் தத்துவங்களையும் மீட்டிப் புலப்படுத்தி, கண்ணனது பெண் வடிவழகில் அன்பால் ஈடுபட்டு பேரின்பங்கண்டவர். அத்தகைய இன்பத்தில், கற்றோர் வியக்கும் வண்ணம், உணர்ச்சி பெருகிட, பாரதியார், காதலியாகிய கண்ணனை, கவிதையெனுமோர் பெண் தெய்வமாகக் கொண்டு பரவுவாராயினர். மற்றும் அவர் அத்தெய்வமேனி கவிதை பேசி தெய்வமணம் வீசிடும்படி, இறைபற்றிய கருத்துக்களை வளர்க்கும் வகையில், இன்னிசைபட யாத்துள்ளார். காதலியாகிய கண்ணம்மாளை, அவர் இலக்கியநலம் திகழ, கவிதைப்பண்பின் சீருடனும், கவிதையுணர்ச்சிச் சிறப்புடனும் அன்பு செய்யும் வளப்பத்தின் அழகை, இனி அவர் தம் வாய்மொழிக்கவிதை வழி பயனுறக்காண்குவம் மற்றும், பாரதியார் காதலியின் ஒளி வீச யாவரது உள்ளத்தையும் அள்ளுந்தகைத்தாய காதலறிவின் பின் அரியபொருள்களை எளிய முறையில் தெளியக்கூறி அழகுபடுத்தும் மாண்பினையும் நோக்குவோம்.

கண்ணம்மாளைக் கண்டகாட்சி வியப்பில், காதலர் தம், மையலால் காதலுறவைச் செலுத்த பின்வருமாறு முனைகிறார்.

> *"வாலைக்குமரியடி, — கண்ணம்மா!*
> *மருவக்காதல் கொண்டேன்."*
> *மூத்தவர் சம்மதியில் — வதுவை*
> *முறைகள் பின்பு செய்வோம்;*
> *காத்திருப்பேனோடீ — இது பார்*
> *கன்னத்து முத்தமொன்று!*

என, தன்காதலைக் கொஞ்சுதலோடு, கன்னம் சிவக்கக் கன்றிடுமாறு வாய் முத்தம் கொடுத்துத் தொடங்கினர்.

பின்னொரு நாள் மாலைப்பொழுதில் வானும் கடலும் முத்த மிட்டே தழுவி முகிழ்த்தலைக் காதலர் கண்டு, பகற்கனவில் தன்னை மறந்த நிலையிலிருக்கும்போது கண்ணம்மா அவரதுபின் புறத்திலே மெல்லவந்து நின்று அவரது கண்களைப் பொத்தி மூடுகையில், காதலர், கண்ணம்மாளின் தொடுகை அழகிலும், வீசுகமழ் வாசத்தி லும் உவகையால் பொங்கி வழியும் ஊற்றிலும், ஒருவாறு உணர்ந்து, 'ஒட்டுமிரண்குளத்தின் தட்டிலும் முற்றித்தலை முழுதும் அறிந்தான்.

'வாங்கி விடடி கையை, யேடி கண்ணம்மா !
மாய மெவரிடத்தில் ?'

என மொழிந்தார். சிரித்த ஒலியுடனிருந்த கண்ணம்மாளின் கையினை விலக்கியே, தழுவி 'என்ன செய்தி சொல்' எனக் காதலன்பன் கேட்க, கண்ணம்மாள்,

'நெரித்த திரைக் கடலில் என்ன கண்டிட்டாய் ?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய் ?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய் ?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய் ?
பிரித்துப் பிரித்து நிதமே கமளந்தே
பெற்ற நலங்களென்ன ? பேசுதி'

என்றாள். அதற்கு காதலன்பன்,

நெரித்த திரைக்கடலில் நின் முகங்கண்டேன்:
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்:
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன் :
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன் :
பிரித்துப் பிரித்து நிதமேகமளந்தே
பெற்றது நின்முகமறின்றிப் பிறிதொன்றில்லை'

எனத் தீவியகாதல் தீ விரதத்தால் தான் தனது தெய்வமயமாய காதலியை எங்கேயும் காண்பதே தன் கண்களின் நிறை பயன் என்ற குறிப்பில் விடையிறுத்தான். ஈங்கு பாரதியார், தன்னில், கண்ணனை அன்ருடம் பழகும் நண்பனுகவும், ஆசிரியனுகவும், மாணவனுகவும், தந்தையாகவும், தாயாகவும், காண்கின்ற சர்வாத்ம உணர்ச்சி வித்தகத்தை, 'கண்ணம்மா — என் காதலி' எனும் பகுதி யில், காதலியைக்காதலன் எங்கும் வியாபக முறக்காணும் இயற்கை அதிசயத்தில் சுட்டிக்காட்டி, ஆத்ம சிந்தனையை அத்வைத சாதனை ஒழுகலாற்றில் புகுத்திய அற்புதம் நினைவு கூர்ந்து இள்புறற்பாலது. இதன் வழி, பாரதியார், நமக்குள்ள ஆத்ம

சக்தியை அறிய, நம்மிடை விளக்கி, தன்னையே எங்கும் காண வைத்து, எதையும் தன்னில் காண வைக்கும் உறுதியுடைய ஆன்ம சக்தி மூலம், உயிர் இன்புறும் வகையினை மாட்சிமை தோன்றத் தெருட்டலானுர். மாலைப்பொழுதில், நுரைசிதறி அதிர்க்கும் திரை கடலோரத்தே, நீல வானத்து மேக மண்டலத்தின் இயற்கை நல வனப்பின் கீழ் கண்ணம்மாவும் காதலரும் திருவருட்தோய்வால் வியந்த நிலையில் எழுந்த கரவற்றகாதலின்பக் கருத்துக்களை எண்ணுந்தோறும், அவை உயிர்ப்பூட்டி சுவை பயக்கும் இயைபில் கவர்ச்சியினைத் தோன்றச் செய்து வாழ்க்கையில் விம்மிதம் தரும், தெய்வீக அமைதியினை நிலை நாட்டும் தகைமைத்து, உயிர் வாழ் வதற்கேற்ற இயற்கை அமைப்பும் வாய்ந்த வனப்புடைய அவ் விடமும் காதலிருவர் தம் அன்புணர்வும் உள்ளக்கருத் தழகும் இவ் வியப்பிற்குக் காரணமாய் நின்றமை ஒரு தனிச் சிறப்புடையதாகக் காணப்படுவது அறிந்து கொள்ளப்படும்.

கண்ணம்மாள் தன் முகத்தைத் திரையிட்டு நாணத்தால் மூடி மறைத்து விடுவதைக் கண்ட அளவிலே மிக மகிழ்ச்சியடைந்த காதலர்,

துணி
மறைத்த தனாலழகு மறைந்ததில்லை ;
சொல்லித் தெரிவதில்லை, மன்மதக்கலை—முகச்
சோதி மறைத்து மொரு காதலிங்குண்டோ ?
ஓரிரு முறை கண்டு பழகியபின்—வெறும்
ஒப்புக்குக் காட்டுவதிந் நாணமென்னடீ ?
காரியமில்லையடி வீண் பசப்பிலே—கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பேனோ ?'

என காதல் நெறிக்கு மெருகு தருமுறையில் கூறி, காதலன்பால் முகத்திரையை வலுவாக அகற்றி விட்டனர். இதனால் அவர்தம் பெருகிய காதல் குறிப்பின் தூய்மையும் தகைமையும், திண்மையும் நிறையும் நன்கு புலப்படுதல் காண்க.

அடுத்தபடியாக, காதலனை ஆதரவுடன் பார்க்க, ஆர்வமொடு காத்துக் கொண்டிருந்த காதலி, காதலனைக் கண்டதும் கண்களை மூடிக் கொள்ளும் அதிசய வழக்கத்தைப் பற்றி பாரதியார் நன்கினிது புலப்படுத்தும் மாட்சிமையினைக் காண்குவம். 'காதலி நாணிக் கண் புதைத்தல்' என்பது அகத்துறையின் பாற்பட்ட அருந்தமிழ் வழக்கங்களுள் ஒன்றாகும். இது உணர்வாட்சி மிக்குடைய நனி நாகரிக காதலிபால் பண்டுதொட்டு தமிழகத்தே வழங்கப்படும்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு. எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00